Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08 + II

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 08 | 22-05-2003 | வியாழக்கிழமை | ஓசை 93

வவுனியா நகரில் தரங் குன்றா தங்க நகைகளுக்கு நம்பிக்கை நாணயம் மிக்க நிறுவனம்

கணேசா நகையகம்

வவுனியா.

(சி-7865)

- இடைக்கால நிர்வாகம் அமைப்பது குறித்த -

# தலைவர் பிரபாகரனின் பரிந்துரைக்கு பிரதமரின் அதிகாரபூர்வ பதில் வேண்டும்!

## இதுவே முக்கிய முடிவுகளுக்கு உதவும் என அன்ரன் பாலசிங்கம் கெல்ஹேசனுக்குக் கடிதம்

(லண்டன்)

**எங்களது தலைவர் வே. பிரபாகரன் முன்வைத்துள்ள இடைக் கால நிர்வாகம் தொடர்பான பரிந்துரைக்குச் சிறிலங்காப் பிரதமரின் அதிகார பூர்வ பதிலை வெளியிடத் தூண்டுமாறு கேட்டுக்கொள் கிறோம் என நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல் ஹேசனுக்கு விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தலை மைப்பேச்சாளருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

மேலும் அக்கடிதத்தில் தமது கருத்தினைத்தெளிவாக, உறுதி யாக வெளிப்படுத்தும்பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் சாதகமான பதில் கிடைக்கும் பட்சத் தில் சமாதானப் பேச்சுவார்த்தை களை மீளத் தொடங்குவது குறித் தும் உதவி வழங்கும் மாநாட்டில் பங்குபற்றுவது குறித்தும் எமது தலைமை முக்கிய முடிவுகள் எடுக்க உதவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இக்கடிதத்தின் முழு விபரமும் உள்ளே பிரசுரமாகியுள்ளது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரதமர் ரணிலுடன் சந்தித்துப் பேச்சு

## -நோர்வே, ஜப்பான் தூதுவர்களையும் சந்தித்தனர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறி லங்காப்பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மற்றும் சிறிலங்காவிற்கான நோர்வே தூதுவர் கான்ஸ்பிரஸ்கர் ஜப்பானியத் தூதுவர் ஆகியோரைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

நேற்றுக்காலை நோர்வேத் தூது வரை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர்களான இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங் கம் மற்றும் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் ஆகியோர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள்- மூதூர் முஸ். பிரதிநிதிகள் திருமலையில் சந்தித்துப் பேச்சு

(திருகோணமலை)

அண்மையில் மூதூர் பிரதேசத் தில் ஏற்பட்ட இரு இனங்களுக் கிடையேயான பிரச்சினைகள் தொடர்பாக திருகோணமலை மாவ ட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். திலக் அவர்கட்கும் மூதூர்ப் பிரதேச மஜீலீன் அச்சூரா பிரதிநிதி களுக்கு இடையே திருமலை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலு வலகத்தில் பேச்சுவார்த்தை நடை பெற்றுள்ளது.

நேற்றுக்காலை 10.00 மணிக்கு இடம்பெற்ற இச்சந்திப்பில் புலிகள் தரப்பில் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் தலைமையிலான குழுவும் முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இக்கலந்துரை யாடலில்மீன்பிடி, போக்குவரத்துத் தொடர்பான பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

# வெளிநாட்டிலுள்ள இலங்கையரிடம் அரசு உதவிபெறுவதற்கு முயற்சி

வெளிநாடுகளில் தங்கியுள்ள இலங்கையர்களிடமிருந்து உதவி களைப் பெற்றுக்கொள்ள வெளி விவகார அமைச்சு நடவடிக்கை களை ஆரமபித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சு இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளிலுள்ள இலங்கை கல்விமான்கள் உயர் தொழில் செய்வோர் ஆகியோரை இலங்கை மக்களுக்குச் சொந்தமான நிறுவன ங்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வெளிநாடுகளி லுள்ள இலங்கைத் தூதுவர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

## எம்.எஸ்.எவ் அறிவித்தல்

புதுக்குடியிருப்பு வைத்தியசாலை யில் எம்.எஸ்.எவ் வைத்தியர் வரும் 26ம் திகதி முதல் 30ம்திகதி வரை கடமையில் ஈடுபடமாட்டார். மீண்டும் மகப்பேற்று விடுதிக்கான தங்கள் உதவியை மே31ம் திகதி ஆரம்பிப் பார். (26)

-வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு -

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 12 இலட்ச ரூபா உதவிப்பொருட்கள்

(கொழும்பு)

தென்பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கு வதெற்கென பன்னிரெண்டு இலட் சம் ரூபா பெறுமதியான பொருட் களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கொழும்பிற்கு அனுப்பிவைத்துள் ளது. வவுனியாவிலிருந்து பத்து பார ஊர்திகள் இப்பொருட்களுடன் கொழும்பு நோக்கி புறப்பட்டுள்ளது.

இப்பார ஊர்திகள் இன்று பாதி க்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று சிறிலங்காவின் சமூக அபிவிருத்தி அமைச்சர் சந் திரசேகரன் தெரிவித்துள்ளார். உணவுப்பொருட்கள், உடு புடவைகள் மற்றும் படுக்கை விரிப்புக்கள், பாய்கள் என்று பெருமளவிலான பொருட்கள் இதில் அடங்கியுள்ளன.

- மட்டு-ரெலோ செயலாளரின்-

# வியாபார ஸ்தாபனம் மீது கைக்குண்டு வீச்சு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிலுள்ள ரெலோ செயலாளர் நாயகமான பிரசன்னா வின் வியாபார ஸ்தாபனம் மீது நேற்று இரவு 7.15 மணியளவில் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டுள் ளது.

அந்த வழியால் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத நபர் ஒருவ ரால் இந்தக் கைக்குண்டு வீசப் பட்டுள்ளபோதும் இது வெடிக்காத தால் சேதம்எதுவும் ஏற்பட வில்லை.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக் களப்பு பொலிசார் விசாரணை களை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து பிரசன்னா கூறுகையில்; அரசியல் ரீதியாகத் தமதுகட்சியுடன் முரண்பாடு கொண்டவரால் இந்தக் கைக்குண்டு வீசப்பட்டிருக்கலாம் என்று கூறினார்.

மட்டக்களப்பு நகர் மற்றும் புறநகர் ப்பிரதேசத்தில் ஒருவாரகாலத்திற் குள் இடம்பெற்ற நான்காவது கைக்குண்டு வீச்சுச் சம்பவம் இதுவாகும்.

# எங்குவாழ்ந்தாலும் ஈழத்தமிழர்கள் ஒன்றுபட்ட சக்தியாவே உள்ளனர்

## கலாநிதி ஜெய். மகேஸ்வரன்

(அலுவலக செய்தியாளர்)

யுனிசெவ் நிறுவன நிதியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத் திய முகாமைத்துவ பயிற்சி நெறியானது அவுஸ்திரேலியா வாழ் நிபுணர்கள் நேரடியாக வந்து தாய கத்தில் பல திறன்மசாலிகளை உரு வாக்கக்கிடைத்த பெரும் வாய்ப்பா கும்.

இது அரசியலிலும் சரி பொருளா தார ரீதியிலும் சரி ஈழத்தமிழ் மக்கள் புலம் பெயர் நாடுகளில் வாழ்ந்தா லும் ஒன்றுபட்ட சக்தியாக பின்னிப் பிணைந்து நிற்பதையே காட்டுகின் றது.

யுனிசெவ்நிறுவன நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடா த்திய முகாமைத்துவப் பயிற்சி நெறியில் தேர்ச்சி பெற்ற வள அணி

(08ஆம் பக்கம் பார்க்க)

# கையஸ்-துவிச்சக்கரவண்டி விபத்து; இளைஞர் ஒருவர் ஸ்தலத்தில் பலி!

## மற்றொரு இளைஞர் படுகாயம்

(தருமபுரம்)

தருமபுரம் வைத்தியசாலைச் சந்தியில் நேற்று 2.30 மணியளவில் துவிச்சக்கரவண்டி, கையஸ்வான் விபத் தில் மயில்வாகனபுரம் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். மற்ற இளைஞர் படுகாயமடைந்தார். இவருக்கு தருமபுரம் வைத்தியசாலையில் ஆரம்ப சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் உடனடியாக அம்புலன்ஸ் வண்டி மூலம் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டார்.

மயில்வாகனபுரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி குகதாஸ் (வயது 19)என்பவரே கொல்லப்பட்ட வராவார். அதே இடத்தைச் சேர்ந்த தயாளன் (வயது 16) என்ப வரே படுகாயமடைந்தவராவார். இச்சம்பவம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும்பல தரமான நல்லின நாற்றுக்களை குறைந்த விலை யில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3256)

### பெயர் மாற்றம்

புதுக்குடியிருப்பு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் சூசைப்பிள்ளை ஆகிய நான் என்னுடைய பெயரை 22.05. 2003 இல் இருந்து ஜோர்ஜ் சூசைமதீஸ் என பெயர் மாற்றம் செய்துள்ளதுடன் என்னுடனான அனைத்துத் தொடர்புக்கும் இதையே பயன்படுத்துவேன். இவ்வண்ணம் ஜோர்ஜ் சூசைமதீஸ். (சி- 7746)

### தேவை

தேர்ச்சி பெற்ற சமையலாளர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். தீன்சுவையகம், கண்டி வீதி மாங்குளம். (சி-7873)

### விற்பனைக்குண்டு

இந்தியன் மோ. சைக்கிள் புதிய (**Beranew**) கீறோ கொண்டா. ஸ்தீட் சிமாட் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்பவர் பெயரில் பதிவுப் புத்தகம் செய்து தரப்படும். தொடர்புக்கு: வ.வேலுப்பிள்ளை, அமுதன் கல்வி நிலையம் அருகாமை, கோம்பாவில் 4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு (3219)

### தவறிவிட்டது

349, மாணிக்கபுரம், விசுவமடு எனும் முகவரி கொண்ட ராகவன் லீலாவதி ஆகிய எனது அ.அட்டை இல. **548331927 X** புளியங்குளத்திற்கும் முறிகண்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (3220)

### காணவில்லை

15.05.2003 அன்றிலிருந்து Y.J. செங்காரி நிறம் (பசு), ம/ர வெள்ளை நிறம் (பசு) (வெள்ளை நிறப்பசுக்கன்று ஆகியன காணாமல் போயுள்ளன. தகவல் அறிந்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். செ. அங்கையற்செல்வி, 17/2திருவையாறு, கிளிநொச்சி. (3272)

### தேவை

வயோதிப மாதுவைப் பராமரிக்க பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். விபரங்கட்கு தீன்சுவையகம் - கண்டி வீதி, மாங்குளம். (சி-7872)

வர்த்தகத்திற்கு விளம்பரம் விளம்பரத்திற்கு ஈழநாதம்

# சிறிலங்காவின் அரசியல் சர்ச்சையை சுமுகமாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்

## இந்தியா ரணிலிடம் தெரிவிப்பு

(புதுடில்லி)

சிறிலங்கா அரசியலில் ஏற்பட்டிருக்கும் அரசியல் சர்ச்சை சுமுகமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்பதே இந்தியப் பிரதமரின் விருப்பம் என்று அவரது ஆலோசகர் பிரதேஷ்மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகள் குறித்த நிலவரம் மற்றும் தென்னிலங்கை அரசியல் சிக்கல்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோருடன் தொலைபேசியில் கலந்துரையாடியபோதே பிரதேஷ்மிஸ்ரா இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசு மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகள் குறித்து பிரதமர் ரணில் பிரதேஷ் மிஸ்ராவிற்கு இந்த உரையாடலின் போது விளக்கிக் கூறியுள்ளதுடன் சனாதிபதியுடனான அரசியல் சர்ச்சையை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளத் தாம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

# சமூகநல சேவைத் திட்டத்தில் சுகாதார கருத்துரையளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சமூகநல சேவைத்திட்டத்தின் கீழ் முல்லை. மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைந்து முல்லை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் முல்லை மாவட்டத்தில் சுகாதாரக் கருத்துரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மக்கள் மத்தியில் காணப்படும் மோசமான சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் களைவது தொடர்பாகவும், டெங்கு மற்றும் சார்ஸ் நோய்கள் தொடர்பாகவும் கருத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இக்கருத்துரையை முள்ளியவளை பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் தி. ஜெகதீஸ்வரன் வழங்கினார். இந்நிகழ்வில் முள்ளியவளை மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள், சுகாதார தொண்டர்கள் என ஏராள மானவர்கள் கலந்து கொண்டனர். (லோ)

## தென்னிலங்கையில் வெள்ளத்தால்

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமெ., அவுஸ்., பிரிட்டன் உதவி

(கொழும்பு)

சிறிலங்காவில் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிவழங்க அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் முன்வந்துள்ளன. இந்த நாடுகளின் சிறிலங்காவிற்கான தூதர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து தங்களது நாடுகளின் உதவிகள் குறித்து அறிவித்துள்ளார்கள்.

# இவ்வருட முடிவில் நாற்பது குளங்கள் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைப்பு

(அலவலக செய்தியாளர்)

"நியாப்" திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 40 குளங்கள் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் ஏற்கனவே 2001ஆம் ஆண்டில் ஒரு குளமும் 2002ஆம் ஆண்டில் 10 குளங்களும் புனரமைக்கும் பணி இடம்பெற்று வருவதுடன் 2003 ஆம் ஆண்டில் மிகுதி 29 குளங்களும் புனரமைக்கப்படும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி நியாப்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள 16 குளங்களும், பூநகரி பிரதேசசெயலர் பிரிவிலுள்ள 13குளங்களும், கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள 7குளங்களும், பளைப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள 4குளங்களுமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 40 குளங்கள் 2001முதல் 2003ஆம் ஆண்டு அதாவது மூன்று ஆண்டு திட்டத்தில் புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் புதிய நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனித நேய கண்ணி வெடி அகற்றும் பிரிவினரால் வெடிபொருள் அகற்றல் தொடர்பாக புதிய திட்டம் ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

மிதிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் சம்பந்தமாக உடன் உதவி தேவைப்படின் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் அனைத்து விழிப்புணர்வு தொடர்பகங்களிலும் துரித கண்ணிவெடி அகற்றும் உதவிப் பணி படிவத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து வழங்கும் பட்சத்தில் அந்தப் பகுதிக்கு விரைவாக வெடிபொருள் அகற்றும் அணியினரை அனுப்பி கண்ணி வெடிகளை அகற்றி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் வழங்கப்படும். (லோ)

# குமார் பொன்னம்பலம் கொலை, சந்தேகநபர் மொறட்டுவ சமன் சுட்டுக்கொலை

(கொழும்பு)

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தைக் கொலைசெய்தவர் என்று சந்தேகிக்கப்பட்ட பாதாள உலகக் கோஷ்டித்தலைவரான மொறட்டுவ சமன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மொறட்டுவவில் பாலம் ஒன்றிற்கருகே கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். என மொறட்டுவ பொலிசார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவத்தில் அவ்வழியால் முச்சக்கர வண்டியொன்றில் பிரயாணம் செய்துகொண்டிருந்த பெண் ஒருவரும் காயமடைந்துள்ளார். இக்கொலைச்சம்பவம் குறித்து மொறட்டுவ பொலிசார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# இரண்டாம் வருட பரீட்சை முடிவுகள்

(கிளிநொச்சி)

தமிழீழசட்டக் கல்லூரியின் வெளிவாரிக் கற்கைநெறியின் இரண்டாம் வருட இறுதித்தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ளன என்பதுடன் இம்முடிவுகளைக் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ சட்டக்கல்லூரியில் பார்வையிடலாம். அத்துடன் திங்கள், செவ்வாய், தவிர்ந்த ஏனைய நாட்களில் பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்லூரி நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.


## தேடுகிறார்கள்

**கிளிநொச்சி ஆனந்த நகரைச் (சேவியர் கடைச் சந்தி) சேர்ந்த இராசேந்திரம் மதிவேந்தன் என்பவரை 12.05.2003 தொடக்கம் காணவில்லை. இவரை ஆதரித்து வைத்திருப்பவர்கள் அல்லது கண்டவர்கள் உடன் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.**



தொடர்பு:
சி. இராசேந்திரம் (அழகு)
ஆனந்தநகர் சேவியர் கடைச் சந்தி,
கிளிநொச்சி.

(3277)

## சிறுநீரகம் தேவை

O+ (O பொசிட்டிவ்) குருதி வகை கொண்ட 55 வயதுடையவருக்கு சிறுநீரகம் ஒன்று அவசரமாகத் தேவைப்படுகிறது. உதவி செய்ய விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: இல 60, ஈழநாதம் பணிமனை, கிளிநொச்சி.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(சி-7879)

## உந்துருளி விற்பனைக்கு

### HERO HONDA (SPLENDER)

தமிழீழ வைப்பகத்தின் பயன்பாட்டிலுள்ள உந்துருளி விற்பனை செய்வதற்கு கேள்விப் படிவங்கள் கோரப்படுகின்றன. இதற்கான வேண்டுகைகள் உரிய கேள்விப் படிவங்களில் விலை விளக்கத்தைக் குறித்து 02.06.2003 ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். உந்தூர்தியைப் பார்வையிடவும். மேலதிக விளக்கங்களைப் பெறவும். பணிநாட்களில் இல 232. திருநகர். கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியகத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேலாளர்,
ஆளுகைப் பகுதி,
நடுவப்பணியகம்,தமிழீழ வைப்பகம்.
(சி-8122)

## சேரன் வாணிபம்

### பணிநிலை வெற்றிடம்

பணிநிலை : கடின உழைப்பு சிற்றூழியர்
தகைமை : அரிசி ஆலைப்பகுதி பணிகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் : நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். உணவு தங்குமிடம் இலவசம்.

மேற்குறிப்பிடப்பட்ட பணிக்கு தகைமை உடையவர்கள் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரியில் 23.05.2003ஆம் நாள் தொடக்கம் 31.05.2003 ஆம் நாள் வரைக்கும் காலை 09 மணி தொடக்கம் மாலை 04 மணிவரை தொடர்பு கொள்ளலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

குறிப்பு: அரிசி ஆலைப் பணிகளில் பயிற்சி பெற்று பணியாற்ற விரும்புவோர்களது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முழுமையான பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் பணி அமர்த்தம் வழங்கப்படும்.

(3278)

**நிர்வாகம்,
சேரன் பணிமனை,
கண்டி வீதி, கிளிநொச்சி.**

# தீவ்ரவாதத் தாக்குதல்கள் இடம்பெறலாம்!

# அமெரிக்க புலனாய்வுத்துறை எச்சரிக்கை!!

## - பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(வாஷிங்டன்)

**அமெரிக்காவில் தீவிரவாதத் தாக்குதல்கள் இடம் பெறக்கூடும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. அமெரிக்க புலனாய்வுத்துறை இது குறித்து எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளது.**

சவுதிஅரேபியா, மொறோக்கோ நாடுகளில் அமெரிக்கர்களை இலக்காக வைத்து அவர்கள் வாழும் பகுதிகளில் அண்மையில் அடுத்தடுத்து இரு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றதுடன் இதில் நூற்றுக்கும் மேலான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து மேலும் தாக்குதல்கள் இடம்பெறக்கூடும் என்ற அச்சம் வெளியாகிவரும் நிலையில் அடுத்த தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அமெரிக்காவிலும் இடம்பெறக்கூடும் எனப் புலனாய்வுத்துறை எச்சரிக்கை செய்துள்ளது.

மேலும் சவுதி அரேபியா மற்றும் மொறோக்கோவிலுள்ள அமெரிக்கத் தூதரகங்கள் மூடப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து பிரிட்டனும் சவுதி அரேபியாவிலுள்ள தனது தூதரகத்தை மூடிக்கொண்டுள்ளது.

வாஷிங்டனின் உள்துறை பாதுகாப்பு உதவி அமைச்சர் கச்சின் இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில், தீவிரவாதிகள் தாக்குதலை நடத்தக்கூடிய சூழ்நிலை இருப்பதை உறுதி செய்துள்ளார்.

இத்தகைய நிலையில் அமெரிக்காவின் தாக்குதல்கள் நடைபெறக்கூடும் என்று கருதப்படும் இடங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

## 5 அம்சத் திட்டம்

இந்தியா பாகிஸ்தானிடையே சுமுக உறவு ஏற்படுத்த ஐந்து அம்சத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருப்பதாக வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா தெரிவித்துள்ளார். லண்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இரு நாடுகளும் தூதுவர்களை நியமிப்பதும், வான்படைகளை நீக்குவதும் இரண்டு முக்கிய அம்சங்களாகும் என்றார்.



ஜெனீவாவில் நடைபெற்ற உலக சுகாதார ஸ்தாபன சார்ஸ் குறித்த கருத்தரங்கில் கலந்து கொண்ட கனேடிய சுகாதார அமைச்சர் ஆன்மக்லெலன் ஊடகவியலாளர் கேள்விகளுக்கு பதிலளிக்கிறார்.



துப்பாக்கி ரவைகளால் சேதமாக்கப்பட்ட தனது வீட்டின் சுவரில் சாய்ந்து நிற்கும் பலஸ்தீன சிறுமி.

# இயற்கை வளங்களைக் கொள்ளையிட இந்தோனேசியாவுக்கு இடமளியோம்

## -ஆர்ஷே தீவிரவாத அமைப்பின் தலைவர் அறிவிப்பு

ஆர்ஷேயின் இயற்கை வளங்களை இந்தோனேசியா கொள்ளையிடுவதற்கு வாய்ப்பளிக்கும் உடன்படிக்கைகளை ஏற்கப்போவதில்லைஎன சுதந்திரத்துக்கான ஆர்ஷே அமைப்பின் தலைவர் மஹமுத் மாலிக் தெரிவித்துள்ளார்.

இருபது வருடங்களாக போரிட்டு வரும் ஆர்ஷே மக்கள் இந்தோனேசியாவைத் தொடர்ந்தும் எதிர்ப்பார்கள். ஆர்ஷே எண்ணெய் மற்றும் எரிவாயு வளம் நிரம்பிய பிரதேசமாகும்.

இங்குள்ள காடுகள் குறித்து கெரிலாக்கள் நன்கு பரிச்சயமானவர்கள் அங்குள்ள இயற்கை உணவுகளை உட்கொண்டு போராட்டத்தில் ஈடுபட போராளிகள் தயாராக இருக்கின்றனர்.

இந்தோனேசிய வீரர்களிடமிருந்தே ஆயுதங்களை வாங்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகள் முறிவடைந்த நிலையில் ஆர்ஷே மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகளுக்கு இந்தோனேசிய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளமை தெரிந்ததே.



பலஸ்தீன சிறுமி யொருத்தி தென் லெபனானின் சீடான் நகரருகேயுள்ள அகதி முகாமிற்கு வெளியே ரவை வெற்றுக் கவசங்களை சேகரிக்கிறார்.

# விரைவில் இந்தியாவுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவே பாகிஸ்தான் விரும்புகிறது

## - பிரதமர் ஜமாலி அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுடன் எந்தவொரு மட்டத்திலும் விரைவிலே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவே பாகிஸ்தான் விரும்புகின்றது என அந்நாட்டு பிரதமர் ஜபருல்லாகான் ஜமாலி கூறியுள்ளார்.

இப்பேச்சுவார்த்தைகளை மிகவும் பயனுள்ள முறையில் தீவிரமான ஒரு சூழலில் படிப்படியாக நடத்தலாம் என அவர் கூறியுள்ளார். புதுடில்லியுடனான உறவில் இறுக்கம் தளர்ந்திருப்பதை பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பும் வரவேற்றுள்ளார்.

நிகழ்வொன்றில் பேசிய பிரதமர் இப்பகுதியில் அமைதி நிலவ வேண்டும் என்றே பாகிஸ்தான் கூறி வந்துள்ளது எனவும், காஷ்மீர் உட்பட இந்தியாவுடனான எல்லாப் பிரச்சினைகளையும் அர்த்தமுள்ள வகையில் பேசித் தீர்க்கவே பாகிஸ்தான் விரும்புவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# எல்லைப் பகுதி மக்கள் அமைதியை நாடுகின்றனர்

(புதுடில்லி)

ஜம்மு -காஷ்மீரில் இறுதியாக நடைபெற்ற தேர்தலில் 45 சதவீத வாக்காளர்கள் பங்கேற்றிருப்பது. அவ் எல்லைப்புற மாநிலமக்கள் அமைதியை நாடுகின்றனர்.என்பதற்கு அறிகுறி என பிரதமர் வாஜ்பாய் கூறுகின்றார்

லக்னோவில் பாரதீய ஜனதாக் கட்சி தொண்டர்களிடையே உரையாற்றிய அவர் காஷ்மீர் மக்கள் இந்தியாவுடன் இணைந்திருப்பதையே விரும்புகின்றனர் என்பதை இத்தேர்தல் காட்டி விட்டது எனக் கூறியுள்ளார்.



# தி.மு.க. உறுப்பினர் கொலை; கருணாநிதியின் மகன் கைது!

(சென்னை)

தி.மு.க. முன்னாள் அமைச்சர் கிருட்டினன் கொலை தொடர்பாக தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மூத்தமகன் மு.க.அழகிரி நேற்று அதிகாலை மதுரையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்திய தண்டனைச் சட்டம் 302,120 **B** ஆகிய பிரிவுகளில் அவர் மீது வழக்குப் பதிவாகியுள்ளது.

மதுரை ஆறாவது குற்றவியல் மன்றத்தில் இவர் ஆஜர்ப்படுத்தப்பட்டவேளை 15 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து மு.க. அழகிரி திருச்சி மத்திய சிறைக்குக்கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

## கலைஞர் பாய்ச்சல்


த.கிருட்டினன் கொலை தொடர்பாக தி.மு.க.வுக்கு கெட்டபெயர் உருவாக்க அ.இ அ.தி.மு.க. அரசு முயல்வதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

. நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பழி ஒரு நிலையிலும், பாவம் ஒரு நிலையிலும் இருந்தாலும் உண்மைக் குற்றவாளியைக் கண்டறிய முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

நேர்மையான பொலிஸ் அதிகாரிகள் மூலமே இந்தக் குற்றவாளியைக் கண்டு பிடிக்க முடியும் என்றும், தி.மு.க.வில் அண்ணா காலத்திலேயே உட்கட்சிப் பூசல் இருந்து வருவதாகவும், இதை வைத்துப் பொய் வழக்கு போட அ.இ.அ.தி.மு.க. அரசு முயல்வதாகவும் உட்கட்சி பூசல் என்பது எல்லா அரசியல் கட்சிகளுக்கும் பொதுவானது என்றும் அவர் கூறியுள்ளார்.



பாக்தாத்திற்கு 50 கி.மீ. தூரத்திலுள்ள புளுகாவில் ஈராக்கிய பள்ளி மாணவர்கள் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.



ஜகார்த்தாவில் சனாதிபதி மாளிகைக்கு வெளியே இந்தோனேசிய சனாதிபதியின் படத்தை எரிக்கும் மாணவர்கள் முன்னைய சுகாட்டோ அரசின் தவறுகளை மீண்டும் புரிய வேண்டாம் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# மனித குலத்திற்கு சவாலாகும்

# சார்ஸ்

"சார்ஸ்" (SARS-Severe Acute Respiratory Syndrome) இன்று உலக நாடுகளின் உதடுகளில் பயத்துடனும், திகிலுடனும் உச்சரிக்கப்படும் வார்த்தைதான் இது.

சார்ஸ் என நோயின் பெயரை சுருக்கி விட்ட மருத்துவ உலகம் ஏனோ நோயை சுருக்கவோ, இல்லாமல் அழித்துவிடவோ முடியாமல் திண்டாடுகின்றது. உயிர் கொல்லி நோயான எயிட்சையடுத்து, தற்போது உலகில் 30 நாடுகளிற்கும் மேல் பரவிவிட்ட இந்நோய், ஆசியாவிலும், ஆசியாவிற்கு வெளியே கனடாவிலும் தான் தன்னை வலுவாக தன் நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ளது.



சார்ஸ் வைரஸ் பரவாதிருக்க நகர சுத்தியில் ஈடுபடும் பிலிப்பைன்ஸ் தொழிலாளர்கள்.

அத்துடன் ஏனைய நாடுகளிலும் எப்படி... எவ்வாறு... நுழையலாம் என்று சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கின்றது. அதனாலேயே பல நாடுகள் தங்களது விமான நிலையத்தில் வைத்தியர் குழுவை வைத்து மற்றைய நாடுகளிலிருந்து வருபவர்களை இருமலா... தும்மலா... சார்ஸின் அறிகுறி உண்டா... என பரிசோதித்து அனுப்பிக் கொண்டிருக்கின்றன.

இதுவரை நேற்றைய தகவலின்படி உலகில் இரண்டு வைத்தியர்கள் உட்பட 637 பேர் சார்ஸ் பிடியில் மாண்டு போயுள்ளனர். இன்னும் ஆயிரம் ஆயிரம் பேர் இந்நோயினால் மரணத்தின் வாசலைத் தட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்நோயினால் உலக நாடுகளின் பொருளாதாரம் ஆட்டம் காண ஆரம்பிக்கும் நிலையில் உள்ளது. அதனையும் தாண்டி போக்குவரத்து, கல்வி, கலாச்சாரம், விளையாட்டு... என்பன எல்லாமே முடக்கப்பட்டும், தடுக்கப்பட்டும் வருவதானால், நாளைய உலகின் நிலைதான் என்ன? என அச்சப்படும் அளவிற்கு இந்த சார்ஸ் நோய் தன்னை இனம் காட்டிக் கொண்டுள்ளது.



விமானம் மூலமே சார்ஸ் பரப்பப்படுவதை சித்தரிக்கும் படம்

சென்ற ஆண்டு நவம்பரில் இந்நோய் சீனாவில் தன்னை வெளிப்படுத்தி கொண்ட போது சீனாவின் அசமந்தப் போக்கினால், கடந்த பெப்ரவரியில்தான் சார்ஸ் என இனம் காணப்பட்டது.

இதுவரை சீனாவில் 284 பேர் மரணத்தையும், 7100க்கும் அதிகமானோர் இந்நோயை உள்வாங்கியும் உள்ளனர்.

சீனாவில் சார்ஸின் அதி உக்கிர தாக்கம் வர்த்தகப் பிரசித்தி பெற்ற க்வாங்ஜாய் நகர் தான். இந்நகரில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சி உலகைப் பிரசித்தி பெற்றது. சீனாவின் 14 சதவீத ஏற்றுமதிகளின் பொருட்களை வாங்குபவர்கள் இந்த வர்த்தகக் கண்காட்சியில்தான் கையொப்பமிட்டுக் கொள்கின்றார்கள்.

குண்டூசி முதல் கார் வரை தயாரிக்கும் அத்தனை உற்பத்தியாளர்களும் இந்த வர்த்தகக் கண்காட்சியில் இருப்பார்கள்.

இக்கண்காட்சி நடைபெறும் வேளை, க்வாங்ஜாவில் தங்குமிட அறைகள் கிடைப்பது அரிதிலும் அரிது என்று கூறப்படுகின்றது. ஒரு நாள் மட்டும் 13500க்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் கூடுவதால் சீனாவின் பொருளாதாரம் வலுவடைந்தமைக்கு இதுவும் காரணம் என்று நம்பப்பட்டது.

தனது நாட்டிற்குள் கண்காட்சி மூலம் வெளிநாட்டவரை அழைத்து, தனது நாட்டுப் பொருளுக்கு, தனது நாட்டிலேயே அவர்களை இறக்குமதிக்குத்தூண்டும் சக்தி படைத்த சீனாவின் பொருளாதாரம் முதல்.. இன்று எல்லாமே சார்ஸ் நோயினால் முடங்கிப் போயுள்ளது.

இந்த வர்த்தகக் கண்காட்சிக்கு தற்போது வெளிநாட்டவர்கள் வருவது குறைந்து. ஆயிரம் நூறாகி, நூறு பத்தாகி, பத்து பூச்சியத்தில் கொண்டுவந்து விட்டுள்ளது.

க்வாங்ஜாவில்தான் சார்ஸ் தோற்றம் பெற்றது என்பதால், உலக நாடுகள் வர்த்தகக் கண்காட்சி என்றதும் அலறி அடித்து ஓடுவதால், சீனாவின் ஏற்றுமதி மிக மோசமாகப் பாதிப்புற்றுள்ளது.

அத்துடன் சார்ஸினால் மரணம் மாதத்தில், கிழமையில் என்று இருந்தது. கடந்த மே 12ஆம் திகதி மட்டும் ஒரே நாளில் 12 பேரைத் தன்னுள் இழுத்துக் கொண்டுள்ளது.

இதனால் நான்சிங் மாகாணத்தில் மட்டும் ஐநூறுக்கும் மேற்பட்ட முடிதிருத்தும் நிலையங்கள், இன்டநெட் மையங்கள் முதலியவற்றை அரசு மூடிவிட்டது. 10,000க்கும் அதிக மாணவர்களை தனிமையிலும் வைத்துள்ளது.

இது இன்னும் பல விதமான தாக்கங்களை சீனாவில் ஏற்படுத்தியுள்ளது. பிரசித்தி பெற்ற இடங்களில் மக்களைத் தேடிப் பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கல்வி புகட்டும் பாடசாலைகள் வெறுமையைத் தாங்கியுள்ளன.

இதேபோல் உலகில் முதன்மையான உல்லாசப்பயணத்துறை முதன்மையான வர்த்தக நகரம் எனும் பெருமைகளைக் கொண்ட கொங்கொங்கில்தான் இன்று மக்கள் நடைப்பிணமாக உலாவுகின்றார்கள்.

ஆரம்பத்தில் இந்நோய் பரவியிருப்பது கண்டறியப்பட்ட போது கொங்கொங் அரசு பெரிதாக காட்டிக் கொள்ளாமல், சாதாரணமாகவே தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

ஆனால் நோயின் வேகத்தால் இதுவரை 247 பேர் மரணத்தையும், 1700 பேருக்கு மேல் இந்நோயினாலும் பீடிக்கப்பட்டுள்ளனர்.

**அ. கலைவாணி**

இதனால் கொங்கொங் மக்கள் முகமூடிகள் இன்றி வெளியே வரவே அஞ்சுகின்றார்கள். அதைவிடவும் வீட்டிற்குள்ளேயே முகமூடியுடன் உலாவவும் தயாராகிவிட்டார்கள்.

அத்துடன் ஒவ்வொரு நாளும் சார்ஸ் நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்வதால் சும்மா கூட யாரும் கை குலுக்கிக் கொள்வதில்லை. இவர்களது பயத்தை அதிகரிப்பது போல, கொங்கொங் மருத்துவமனையின் முதன்மையதிகாரியும் இந்நோய்க்கு ஆளாகியுள்ளமை இவர்களை இன்னும் திகிலில் ஆழ்த்தியுள்ளது.

சீனாவில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சிக்கு, வெளிநாட்டவர்கள் கொங்கொங்கில் தங்கி இருந்தே இதுவரை செல்வது வழமையாக இருந்து வந்துள்ளது.

இங்கு மொத்தத் தங்குமிட அறைகள் 35000 க்கும் மேல் உள்ளது அதுவும் மூன்று மாதத்திற்கு முன்பு பதிவு செய்யப்பட்டு விடுவதும் வழமை.

தற்போது இவையனைத்தும் வெறிச்சோடிப் போயுள்ளது.தங்குவதற்கு யாருமே வருவதில்லை.கொங்கொங்கில் காலடி வைக்கவே அனைவரும் அஞ்சுகின்றனர். வீணே வர்த்தகக் கண் காட்சி பார்க்கப் போய் உயிரைப் பலிகொடுப்பதா...எனும் கிலிதான் எல்லோர் மனங்களிலும் நிழலாடுகின்றது.

அத்துடன் கொங்கொங்கில் இருக்கும் அடுக்கு மாடிக் குடியிருப்புக்களிலுள்ள கட்டடத்தில் வசிப்பவர்கள், புகழ்பெற்ற நிறுவனங்களில் பணி புரிபவர்கள் இதனால் இந்தக் கட்டடத்திலுள்ளவர்கள் எழுபது சதவீதத்திற்கும் மேற்பட்டோர் சார்ஸால் தாக்கப்பட்டுள்ளார்கள் எனும் சந்தேகத்தில், பல்வேறு நிறுவனங்களும் அக்குடியிருப்புக்களிலிருந்து வேலைக்கு வருபவர்களை வரவேண்டாம் என்று அறிவித்துள்ளன.

இம்மாடியில் வசிப்பவர்கள் வெளியுலகுடன் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் தமக்கு விமோசனம் கிட்டாதா என அல்லாடி வருகின்றனர்.

இன்றைய நாளில் கொங்கொங்கில் அதிகமாக விற்பனையாவது முகமூடிகள்தான். இத்தனை சோகத்திலும் வண்ண வண்ண டிசைன்களில், பல்வேறு கார்ட்டூனுடனும் படு சூடாக விற்பனையாகின்றது.

சீனாவிலிருந்து கனடாவுக்குச் சார்ஸைக் காவிச் சென்றவர் ஒரு பெண்மணி. அவர் உட்படக் கனடாவில் 10 பேர் இறந்துள்ளனர். 88 பேருக்குச் சார்ஸ் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், 100 பேருக்கு சார்ஸ் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இதனால் பாடசாலைகளின் பக்கமே மாணவர்கள் எட்டிப்பார்ப்பதில்லை என கல்வி அதிகாரிகள் கவலை அடைந்துள்ளனர்.

சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் சுற்றுலாத்துறையைப் பெரிதும் நம்பியுள்ளவை. தற்போது சார்ஸ் இந்நாடுகளில் கால் பதித்துள்ளமையினால் நாடுகளின் பொருளாதாரம் தற்போது நிலை குலைந்து போயுள்ளது.



ரயில் பெட்டிகள், விமானங்கள் அனைத்தும் ஆளில்லாமல் வெறுமையில் செல்கின்றன. சுற்றுலாத்துறை ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இந்நாடுகளின் பொருளாதாரத்தில் இத்துறையும் பெரும் பங்கு வகிக்கின்றமையினால், இந்நாடுகள் மிகவும் கவலையுடன் சார்ஸ் அச்சம் தீருமா.. நாடு முன்னேறுமா... என ஏங்கிக் கொண்டிருக்கிறன.

இவ்வாறு ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கென 30ற்கும் மேற்பட்ட நாடுகளில் சார்ஸ் தனது கோரக் கைகளை விரித்துள்ளது.

தாய்வானில் எவருக்குமே சார்ஸ் இல்லையென அரசு சாதிக்கின்றது. ஆனால், 40 பேர் இறந்துள்ளதுடன் 344 பேருக்கு சார்ஸ் இருப்பதாகவும் உண்மைகள் கசிந்துள்ளன.

அதேபோல் இங்கே சார்ஸ்... அங்கே சார்ஸ்... என இந்தியாவின் பரபரப்பு, கோவையில் சார்ஸ் நோயாளியைக் கண்ட பின்னரே உஷாரானது.

இலங்கையிலும் இரண்டு மரணங்கள் சார்ஸா... என வினா எழுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறு உலக நாடுகளை ஆட்டிப் படைக்கும் சார்ஸ் எவ்வாறு உருவாகின்றது என்பதைக் கண்டறிய சீனாவிடம் ஆரம்பத்தில் உலக சுகாதார நிறுவனம் (WHO) அறிக்கை கேட்டிருந்த போதும், சீனா தனது நாடு



பாதிப்படைந்துவிடும் எனப் பயந்து மேலெழுந்தவாரியாகவே அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

இதனால், இன்று எல்லா நாடுகளிலும் சார்ஸ் நர்த்தனமாடுவதால் சீனா அன்றே சரியான அறிக்கை தந்திருந்தால் இன்று எமது நாட்டிலும் இந்நோய் பரவியிருக்க வாய்ப்பிருந்திருக்காது என்று அமெரிக்க மருத்துவர்கள் புலம்புகின்றார்கள்.

இதுவரையில் உலக சுகாதார நிறுவனம் சார்ஸ்"க்கான காரணம் 'கொரோனா வைரஸ் (Corona virus)' என இனம் கண்டுள்ளது. இதனைக் கொண்டு மருந்தும், தடுப்பூசியும் கண்டுபிடிப்பதில் முனைப்பாகச் செயற்படுகின்றது.

மருந்து கண்டுபிடிக்க பல மாதங்களும், தடுப்பூசி கண்டுபிடிக்க குறைந்தபட்சம் 02 வருடங்களும் செல்லலாம் என கூறப்படுகின்றது.

ஏற்கனவே சீனாவில் 1957 இல் பரவிய ஏஷியன் ஃப்ளு எனும் காய்ச்சலால் உலகம் முழுதும் பத்து இலட்சம் பேர் மாண்டனர்.

தற்போதும் சீனாவில்தான் சார்ஸ் ஆரம்பமாகி உலகெலாம் பரந்து விரிகின்றது மருந்து கண்டுபிடிக்கப் பல மாதங்கள் செல்லுமெனில் சார்ஸ் இன்னும் எத்தனை எத்தனை.. உயிரைப் பலிகொண்டு... இல்லாது ஒழியுமோ? எனும் அச்சம் தான் தற்போதுள்ள வினா.

விஞ்ஞானம் விண்ணைத் தொட்டால் தான் என்ன... அவற்றின் நன்மைகளால் தீமைகளும் இல்லாமல் இல்லை என்பதுடன், எங்கோ ஒரு மூலையில் சீனாவில் ஏற்பட்ட இந்நோய் இன்று உலகம் பூராவும் கிலி கொள்ள வைத்துள்ளது என்றால் இது மருத்துவ உலகிற்கான சவாலாகத் தானே இருக்க முடியும். இந்தச் சவாலை மருத்துவ உலகு எப்படி எதிர்கொள்ளப் போகின்றது என்பதே இன்றைய கேள்வியாகும்.

**தமிழ** மக்களின் வீட்டு முற்றங்களில் பூத்துப்படர்ந்து நின்ற முல்லைப் பந்தல்களைப் பிய்த்தெறிந்து கொண்டு இரும்புச் சப்பாத்துக்கள் அத்துமீறித்தடம் பதித்தன.

வீட்டின் கதவுகள் எட்டி உதைந்து திறக்கப்பட்டன.

அப்பாவி அப்பாக்களின் நெஞ்சுக்கு நேரே துப்பாக்கிக் குழல்கள் நீண்டன. அன்பான அம் மாக்களின் தலைக்கு மேலே துவக்குப் பாத்திகள் உயர்ந்தன. அக்காவும், தங்கைமாரும் அழுத குரல்கள் அர்த்தமற்றுப் போயின. இளைஞர்கள் காரணமெதுவுமின்றிச் சிறைகளில் தள் ளப்பட்டனர். தீ வைப்புக்கள், படுகொலைகள் மேலும் மேலும் தொடர்ந்தன. அதுவரை பரீட்சை மண்டபங்களிலும், நேர்முகப் பரீட்சை களிலும் பார்வையிடப்பட்ட அடையாள அட்டைகள் இரும்புத் தொப்பிக்காரர்களால் பிறந்த வீட்டினுள் வைத்தே பரிசீலிக்கப் படுகின்ற துர்ப்பாக்கிய நிலை.

இவ்வாறு ஈழத்தமிழினத்திற்கு எதிரான வன் கொடுமைகள் சிறிலங்காவிலிருந்து எமது தாயகத்தின் வாயில் கடந்து, வீட்டு முற்றத்தினையும் தொட்டுவிட்ட உச்சக் காலகட்டம். அது 1983ஆம் ஆண்டின் நடுப்பகுதி.

மாற்று வழி ஏதுமின்றி ஆயுதங்களால் செப்பனிடப்பட்ட பாதைவழி தமிழ் இளைஞர்கள் வேகமாக நகரத் தொடங்கினர்.

அப்பாவி ஈழத்தமிழ் மக்கள் மீது கொண்ட மேலான அன்பின் நிமித்தம், தாயக மண் மீது கொண்ட தீராத பற்றின் நிமித்தம், தமிழீழ விடுதலையை இலட்சியமாய் வரித்துக் கொண்ட எம் தலைவர் அவர்களின் தலைமையினைத் தேர்வுசெய்து.

தனது வங்கிப் பதவியினை விட்டெறிந்து,

போன்றோர் இட்ட உறுதியான அத்திவாரமே இன்று நாம் பாரிய இராணுவ சக்தியாக பரிணமித்து நிற்க காரணமாயுள்ளன.

தனதுஆரம்பப் பயிற்சிப் பாசறையில் ஓர் ஆளுமை மிக்க இராணுவ உயர் அதிகாரிக் குரிய சிறப்பியல்புகளை வெளிக்காட்டி, எமது தலைவர் அவர்களாலும் மூத்த போராளிக ளாலும் இனம் காணப்பட்ட ராதாவின் செயற்பாடுகள் அசாத்தியமானவை.

தளபதி ராதாவின் மீது எம் தலைவர் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையின் பாத்திரமாக, புதிய பயிற்சிப் பாசறை



கைபபற் றியதுடன் இரண்டு பொலிசாரையும் சிறைப் பிடித்துக் கொண்டு தளம் திரும்பிய தீரமிகு தாக்குதலில் தளபதி விக்டரின் பக்கத்துணை யாகி நின்ற தளபதி ராதாவும் நினைவு கொள்ளத்தக்கவர்.

இன்று ஆனையிறவுப் பெருந்தள மீட்பு வெற்றிச் சமருக்காக எமது படையணிகள், கடற்புலிகளின் மயிரக்கூச் செறியும் துணிச்சலுடன் தரையிறங்கி, நீரேரியைக் கடந்து உயர் பாதுகாப்புத் தளங்களைப் பிளந்து நின்று நிலையெடுத்து வீரப்போர் புரிந்த களச்சூழல்.

அன்று தளபதிகள் விக்டர், ராதா ஆகியோரின் அடிச் சுவட்டிலிருந்து தொடர் வதை நாம் வரலா ற்றுப் பெருமையுடனும், வீரசாதனையாகவும் எண்ணிப்பார்க்கக் கூடியதாகவுள்ளது.

1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் யாழ். கோட்டை இராணுவத் தளத்தின் உயர் பாதுகாப்பினுள் அமைந்திருந்த யாழ். பொலிஸ் நிலையம் எமது மூத்த தளபதி கேணல் கிட்டு அவர்களின் தலைமையில் துணிகரமாகத் தாக்கி அழிக்கப்பட்டது. பின்பு 1987ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அதியுயர் பாது காப்புடன் கூடிய யாழ். பொலிஸ் விடுதி மீண்டும் தாக்கி அழிக்கப்பட்டு ஐந்து

இயக்கிக் கொண்டிருப்பது தெளிவாகப் புலப்படுகின்றது.

தனது இடது கையினால் இதமாகத் தலை தடவி, அப்பன்.. அப்பன்... என்று அன்பு மொழிபேசி தாயாய், தந்தையாய், தளபதியாய் இவ்வாறு போராளிகளின் தேவைக்கேற்ப நிலைமைகளைப் புரிந்து தன்னை மாற்றி எம்மோடு வாழ்ந்த தளபதி ராதாவின் நினைவுகள் நெஞ்சில் ஈரம் கசியவைக்கும், நெஞ்சில் வீரம் பிறக்கவைக்கும்.

ஐசே! சிறி நாத்தை சுட்டுப்போட்டான், ஐசே! சாம் ஐ சுட்டுப்போட்டான். என்று வார்த்தைக்கு வார்த்தை ஐ.சே, ஐ.சே என்றும் அப்பன் அப்பன் என்றும் வாழ்ந்து, வழி நடத்திய தளபதி ராதாவின் நினைவுகள் என்றும் அழியாதவை.

18 வருடங்களுக்கு முன் எமது இயக்கம் திம்பு பேச்சுவார்த்தைக்கான முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளை எமது போராளியான லெப். சாம் என்பவரை சிறிலங்காப் படையினர் சுட்டுக் கொன்றுவிட்டனர். அப்போது தளபதி ராதாவின் உளக்கொதிப்பும், சிங்களப் படையினரின் அத்துமீறிய போக்கும்,

பல வருடங்கள் இடைவெளியின் பின் 5ஆ வது தடவையாக சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் எமது இயக்கம் அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கும்போது சர்வதேச கடற்பரப்பில் 11 போராளிகள் தமது உயிரை இழந்த துன்பகரமான சம்பவத்தையிட்டு நாம் அடைந்த உளக்கொதிப்பினையும் சிறிலங்கா கடற்படையினரின் அத்துமீறிய போக்கினையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது சிங்களப் படையினரின் அத்துமீறிய மன நிலைகளில் மாற்றம்வரக்கூடிய சான்றுகளைக் காண முடியாதுள்ளது.

# லெப்.கேணல் ராதா நினைவாக...

வசதி வாய்ப்பு, அந்தஸ்து என்ற போலிகளைப் புறந்தள்ளி, விடுதலைப் பாதையில் இணைந்த 'ஹரி' என்றழைக்கப்பட்ட ஹரிச்சந்திரா எனும் இளைஞன்.

தளபதி ராதாவாகி விடுதலைப் பயிரின் ஆணிவேருக்கு உரமூட்டிய இனிய பொழுதுகளை மீட்டிப் பார்ப்பது காலத்தின் தேவையாகி நிற்கிறது.

யாழ். குடாநாட்டின் சிறிலங்காப் படை முகாம் களிலிருந்து படையினரை வெளியேறவிடாது தடுத்து நிறுத்தி படை முகாம் வாசலில் முற்றுகையிட்டு நின்ற 1985,86,87ஆம் ஆண்டு காலப்பகுதியில் பலாலி தளத்திலிருந்து எறிகணைகள், விமானக் குண்டு வீச்சுக்கள் சகிதம் முன்னேற முயன்ற படை யினரை எதிர்த்து மிகச் சிறிய அணியைக் கொண்டு விரட்டியடித்த வீரச்சமர் ஒன்றில் தலைமை தாங்கி நின்ற யாழ். மாவட்டத் தளபதி லெப். கேணல் ராதா அவர்கள் வீரச்சாவடைந்து 16ஆண்டுகள் கடந்துவிட்டன.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்னே எமது கண்ணிவெடிகளால் சிதைந்துபோன சிறிலங்காப் படையினரின் இராணுவ மனோ நிலை, அவர்களால் மிகப் பலமெனக் கருதப்பட்ட பவள் கவச வாகனத்தின் புதிய வருகையோடு சீர் செய்யவென முற்பட்ட வேளை, தளபதி ராதா தலைமையில் நடாத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதல் மூலம் பவள் வாகனம் சிதைக் கப்பட்டவுடன் படையினரின் மனோ நிலையானது சிதைந்து, சிதைந்தே நகரத் தொடங் கியது.

இன்று 'பவள்' கவச வாகனம் உட்பட ராங் கிகள் வரை படைத் தரப்பால் கைவிட்டு விட்டு புறமுதுகிட்டு ஓடும் இழி நிலை சிறிலங்காப் படையினருக்கு ஏற்பட்டுள்ளமையானது 20 ஆண்டு காலமாக

ஒன்றினை நடாத்தும் பாரிய பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது தலைவர் அவர்களின் எண்ணக் கருவினை சுமந்து நின்று முற்றிலும் மாறுபட்ட புதிய வடிவமைப்பிலான பயிற்சித்தளம் ஒன்றை அமைத்தார்.

அதுவரை இந்திய பயிற்சி அதிகாரிகளால் வழங்கப்பெற்ற பயிற்சி முறைகளிலிருந்து மாறுபட்டு, ஒழுங் குபடுத் தலுடன் கூடியதான முழுமையான சீருடை தரித்த நிலையில், தமிழீழப் பிரதேசத்தின் புவியியல் தரைத்தோற்றத்தைக் கருத்திற் கொண்டு தயார்ப்படுத்தப்பட்ட பயிற்சிப் பாசறையாக முழுமை பெற்று உயர் பயிற்சிபெற்ற இராணுவ அணி ஒன்றினை உருவாக்கிக் காட்டினார்.

இன்று பெயர் சூட்டி அழைக்கின்ற பல பயிற்றப்பட்ட சிறப்புப் படையணிகளைக் கொண்டதாக எமது விடுதலை இயக்கம் பரந்து விரிந்து நிற்பதற்கான பலமான முகவுரை ஒன்றினை எம் தலைவர் அவர்கள் கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு முன்பே தளபதி ராதாவினூடாகச் செயற்படுத்தத் தொடங்கியுள்ளார் என்பதை நோக்கும் போது எமது விடுதலை அமைப்பின் பரிணாம வளர்ச்சியின் கனம் தெரிகிறது.

தனது பயிற்சிப் பாசறையின் மாணவப் போராளிகளுடன் 1985ஆம் ஆண்டு முற்பகுதியில் மன்னார் மாவட்டத்தில் களப் பணியாற்ற தலைவர் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டபோது, இருபது பேர் கொண்ட அணியுடன் களமிறங்கிய தளபதி ராதா அவர்கள்

பொலிசாரும் சிறைப்பிடிக்கப்பட்டனர். அப்போது தளபதி கேணல் கிட்டு அவர்களின் பக்கபலமாக தளபதி ராதா அவர்களும் அணி சேர்ந்து நின்றதும் இன்னுமொரு வரலாற்றுப் பதிவாகிறது.

இவ்வாறு மன்னார் கோட்டை வாயிலில் வைத்து இரண்டு ரக் வண்டியில் வெளியேறிய இராணுவத்தினரை உயர் பாதுகாப்பு வலயத்தினை, பொருட்படுத்தாமல் நின்று சிதைத்து அழித்த துணிகர வெற்றித்தாக்குதலிலும்,

யாழ். -காங்கேசன்துறைமுகத்தினுள் காபர் வியூ ஹொட்டலில் முகாமிட்டிருந்த இராணுவ மினி முகாமினுள் உயர் பாதுகாப்பினையும் ஊடறுத்து அதிரடியாய் உட்புகுந்து பல இராணுவத்தினரைக் கொன்றழித்து பல நவீன ஆயுதங்களையும் கைப்பற்றிய துணிவு மிக்க வெற்றித் தாக்குதலையும் தளபதி ராதா அவர்களே தலைமையேற்று நடாத்தினார்.

இவ்வாறு 18 வருடங்களுக்கு முன்பே சிறிய அணியைக் கொண்டு இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களை ஊடறுத்து அதிரடியாய் உட்புகுந்து பேரிடியாய் போய் வெடித்து இறுதியாகத் தீச்சுவாலைக்கே தீமூட்டி வென்ற எமது போர்ப்படையணிகளுக்கு முன்னால் இராணுவ அவமானங்களைச் சுமந்துநிற்கும் சிறிலங்காவின் படைத்தரப்பானது,

அடி அத்திவாரங்கள் சிதைக்கப்பட்டு, உருக்குலைந்த தளத்தில் கட்டியெழுப்பப்பட்ட நிலையில் உயர் பாதுகாப்பு வலயம் என்று இன்றைய சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்ட வண்ணம் தம்மாந்துக் காட்டுவது வேடிக்கைக்குரியதொன்றாகும்.

ஆரம்ப காலங்களில் பதுங்கித் தாக்குதல்களிலும் சரி, கண்ணிவெடித் தாக்குதல்களிலும் சரி, எதிரியின் முன்னேற்ற முயற்சிகள் மற்றும் சுற்றிவளைப்புக்களை முறியடிப்பதிலும் சரி, பொலீஸ் நிலையங்கள், இராணுவ மினிமுகாம்கள் மீதான தாக்குதல்களிலும் சரி சிறிய அணிகளைப் பயன்படுத்தி, மரபுவழிப் போருக்கு நிகரான போர்க்களங்களை எதிரிக்கு முன்னால் வரித்து எதிரியைத் தடுமாற வைத்த சாதனை மிகு களங்களில் நின்று வழிகாட்டிய வீரத்தளபதிகளில் லெப். கேணல் ராதாவின் பணியும் மெச்சத்தக்கது.

எமது இயக்கத்தின் பலம் என்பது எமது போராளிகளின் நெஞ்சுரத்தில் இருந்தே பிறக்கிறது என்ற எம் தலைவர் அவர்களின் உயிர்த் துடிப்புமிக்க வைர வரிகளுக்கு அன்று தொட்டு இன்றுவரை கடந்த 20 வருட கால ஆயுதப் போரில் எமது போராளிகளும் தளபதிகளும் காட்டிவரும் நெஞ்சுரம் என்பது வாழையடி வாழை யென இரத்தமும், சதையுமான வரலாறாகி எம்மையும் எமக்கூடாக விடுதலைப் போராட்டத்தையும்

லெப். சாம் என்ற போராளி அநியாயமாகச் சுடப்பட்டபோது, தளபதி ராதா அவர்களின் தலை மையில், மறுநாள் ஒரு சிறிலங்கா இராணுவ ஜீப் வண்டி 7 சிப்பாய்களுடன் தகர்க்கப்பட்டு பழிதீர்க்கப்பட்டது.

தமிழீழ தேசத்திற்கு எதிராக சிங்களப் படை யினரால் ஒன்று செய்ய முடியுமாயின், அதை விட பல மடங்கு மிகச் சிறப்பானதாய் எங்க ளாலும் செய்ய முடியும் என்பதற்கான வரலாற் றுத் தடங்கள் கடைசிவரை இவ்வாறு தான் நகர்ந்துள்ளன.

ஆனாலும், இன்று நாம் அமைதி காத்து நிற்கின்றோம். புதிய மாற்றம் வேண்டிக் காத்துக் கிடக்கின்றோம். சிறிலங்காவின் போக்கில் மாற்றம் வருமா? அதன் படைத்தரப்பு தன் பலவீனத்தை அறியுமா? சர்வதேச சமூகம் நிலை மைகளைப் புரிந்து கொண்டும்வாளாதி ருக்குமா? எமது அளப்பெரிய அர்ப்பணிப்புக் களுக்கு நியாயமான பதில் வேண்டும். தளபதி ராதா போன்றோரின் கனவு ஈடேற வேண்டும்.

தளபதி ராதா யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் நாட்களில் சிரேஷ்ட மாணவத் தலைவனாகவும், கடேற் படையணியின் அணித் தலைவனாகவும், சாரணிய இயக்கத்தின் அணித் தலைவனாகவும் தேர்வு செய்யப்பட்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர்.

கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் பெயர் பெற்று விளங்கிய ஆளுமையுள்ள சிறந்த மாணவனாக கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியர்கள், சக மாணவர்கள், கல்லூரி சமூகம் என அனைவராலும் பண்புடன் பாராட்டப்பட்ட சிறந்த தலைவனாகவே வாழ்ந்தார் என்பது எங்கள் தளபதி ராதாவின் பிரகாச மிக்க இன்னுமொரு வரலாற்றுப் பக்கமாகவும் அமையப்பெற்றுள்ளது.

அத்தகைய உயர் பண்பு கொண்ட ராதாவால் இனங்காணப்பட்ட தலைமையில், விடுதலை இயக்கத்தில் இன்று வரை ஆயிரமாயிரம் இளைஞர்கள் இணைந்து விடுதலைக்காக தம் இன்னுயிர்களை அர்ப்பணித்ததில் நியாயம் இருக்கின்றது.

மன்னார் மாவட்ட தளபதியான லெப் கேணல் விக்டர் அவர்கள் வீரச்சாவடைந்தபோது ஏற்படப்போகும் இடைவெளியானது தளபதி ராதாவால் மிக விரைவாகவே நிவர்த்தி செய்து வைக்கப்பட்டது.

இவ்வாறு யாழ். மாவட்ட தளபதியான கேணல் கிட்டு அவர்கள் ஆபத்தான காயங்களுக்குள்ளானபோது, அவரது பணியினை மிக விரைவாக செய்து முடித்த தளபதி ராதா அவர்களின் இழப்பானது ஜீரணிக்க முடியாத இடைவெளி ஒன்றினை ஏற்படுத்தியதுடன் இன்றுவரை அது நெஞ்சை அழுத்துவதாகவே தெரிகிறது.

## லெப். கேணல் ராதா அவர்கள் குறித்த தனது மனப் பதிவுகளைப் பகிர்ந்துகொள்கிறார் தளபதி கேணல் பானு

படையினரின் போரிடும் ஆற்றல் சிதைந்து கொண்டே வந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

அதேவேளை, எமது இயக்கத்தின் போரிடும் ஆற்றல் என்பது உலக இராணுவ ஆய்வாளர் களையும், இராணுவ வல்லுனர்களையும் வியப் பில் ஆழ்த்திய பெரும் செயல் என்றே நோக்கத்தக்கதாகவுள்ளது.

இத்தகைய போரிடும் ஆற்றலை நாம் ஓர் தடவையிலோ அல்லது ஓரிரு இராணுவ வெற்றிகளிலிருந்தோ பெற்றுக் கொண்டவை அல்ல. மிகுந்த பக்குவமாய், நுணுகி ஆராய்ந்து பாரிய இடர்களுக்கும், சிரமங்களுக்கும் மத்தியில் நின்று நீண்ட காலமாய் போராடிய எமது போராளிகள், தளபதிகளின் மனத் துணிவினாலும், அயராத உழைப்பினாலும் உயிர் அர்ப்பணிப்புக்களினாலும் பெறப்பட்டதே ஆகும்.

ஆரம்ப கால களங்களை தனது போரியல் அறிவினாலும், நுண்ணாய்வுத் திறனாலும் கையாண்ட தளபதி ராதா

எமது மூத்த தளபதி விக்டர் அவர்களுடன் இணைந்து அவருக்குப் பக்கபலமாக நின்று பல துணிகரமான இராணுவ வெற்றிகளை ஈட்டக் காரணமாக விருந்தார்.

1985ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி மன்னார் மாவட்டத்தின் நகர்ப் பகுதியில் அமைந்திருந்த மன்னார் பொலிஸ் நிலையம் வெற்றிகரமாகத் தாக்கி அழிக்கப்பட்ட வரலாற்றுப் பதிவு ஒன்றில் தளபதி ராதாவின் பணி காத்திரமானது.

முற்றிலும் கடலால் சூழப்பட்ட நகர்ப் பிர தேசமொன்றினுள் இரவோடு இரவாக படகுகள் மூலம் பயணித்து, நீண்டதூர நீரேரி பகுதி ஒன்றினைக் கனத்த சுமைகளுடன் கடந்து சென்று மின்னொளியால் போர்த்திய வண்ணம் உயர் பாதுகாப்புடன் கூடியிருந்த சிறிலங்கா பொலிஸ் நிலையத்தை இரண்டு மணி நேரத்துள் வெற்றிகரமாக தகர்த்தழித்ததுடன் பல பொலிசாரைக் கொன்று நூற்றுக் கணக்கான ஆயுத தளபாடங்களைக்

(07 ஆம் பக்கம்பார்க்க)

# உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## (வடக்கு -கிழக்கு மாகாணசபை)

### *வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (நிகொட்)*

***ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.***

***" ஆ அவ" கடன் இல. 1846-SRI (SF)***

# கேள்வி அறிவித்தல் -05

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

*01. வடக்கு -கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டத்தின் (NECORD) ஆகு செலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்காக இந்தக் கடனின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

| தொடர் இல. | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | ஆ க க குறைந்த ICTAD பதிவு | கேள்வி பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | கிளி/நிகொட்/ஈடி/01 | பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் 110'x25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம். | எம்7 | 39000 |
| 02 | கிளி/நிகொட்/ஈடி/06 | பளை றோ.க.த.க. பாடசாலையில் 110' x25' இருமாடிகளைக் கொண்ட வகுப் பறைக் கட்டட நிர்மாணம். (பகுதி1) | எம்7 | 38000 |
| | கிளி/நிகொட்/ஈடி/06 | பளை றோ.க.த.க. பாடசாலையில் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்த 80'x25' கட்டட நிர்மாணம். (பகுதி 2) | எம்8 | 16000 |
| 03 | கிளி/நிகொட்/ஈடி/07 | புன்னைநீராவி அ.த.க. பாடசாலையில் 110'x25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம்.(பகுதி1) | எம்7 | 38000 |
| | கிளி/நிகொட்/ஈடி/07 | புன்னைநீராவி அ.த.க. பாடசாலையில் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்த 80'x25' கட்டட நிர்மாணம். (பகுதி2) | எம்8 | 16000 |
| 04 | கிளி/நிகொட்/ஈடி/08 | கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் 110' x25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம். (பகுதி1) | எம்7 | 38000 |
| | கிளி/நிகொட்/ஈடி/08 | கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்த 80'x25' கட்டட நிர்மாணம். (பகுதி2) | எம்8 | 16000 |
| 05 | கிளி/நிகொட்/ஈடி/09 | பளை மத்திய கல்லூரியில் இரண்டு 120'x25' வகுப்பறைக் கட்டடங்கள் நிர்மாணம். (பகுதி 1) | எம்7 | 34000 |
| | கிளி/நிகொட்/ஈடி/09 | பளை மத்திய கல்லூரியில் செயற்பாட் டறையும் விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்த 80'x25' கட்டட நிர்மாணம். (பகுதி 2) | எம்8 | 16000 |
| 06 | கிளி/நிகொட்/ஈடி/10 | கிளிநொச்சி / புனித பற்றிமா றோ.க. த.க. பாடசாலையில் 110'x25' இருமாடி களைக் கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம். (பகுதி1) | எம்7 | 38000 |
| | கிளி/நிகொட்/ஈடி/10 | கிளிநொச்சி / புனித பற்றிமா றோ.க.த.க. பாடசாலையில் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்த 80'x25' கட்டட நிர்மாணம். (பகுதி2) | எம்8 | 16000 |
| 07 | கிளி/நிகொட்/ஈடி/11 | பிரமந்தனாறு மகாவித்தியாலத்தில் 110'x25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம். (பகுதி1) | எம்7 | 38000 |
| | கிளி/நிகொட்/ஈடி/11 | பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்த 80'x25' கட்டட நிர்மாணம். (பகுதி2) | எம்8 | 16000 |
| 08 | கிளி/நிகொட்/ஈடி/12 | பூநகரி மகாவித்தியாலயத்தில் 110'x25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம். (பகுதி1) | எம்7 | 38000 |
| | கிளி/நிகொட்/ஈடி/12 | பூநகரி மகாவித்தியாலயத்தில் செயற் பாட்டறையும் விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்த 80'x25' கட்டட நிர்மாணம். (பகுதி2) | எம்8 | 16030 |
| 09 | கிளி/நிகொட்/ஈடி/13 | பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தில் 110'x25' இருமாடிக்களைக் கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம். (பகுதி1) | எம்7 | 38000 |
| | கிளி/நிகொட்/ஈடி/13 | பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தில் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்த 80'x25' கட்டட நிர்மாணம். (பகுதி2) | எம்8 | 16000 |
| 10 | கிளி/நிகொட்/ஏஜி/01 | பளை கமநல கேந்திர நிலைய மீள் நிர்மாணம். | எம்7 | 35000 |
| 11 | கிளி/நிகொட்/ஏஜி/02 | உருத்திரபுரம் கமநல கேந்திர நிலைய மீள்நிர்மாணம். | எம்7 | 21000 |
| 12 | கிளி/நிகொட்/ஏஜி/03 | முழங்காவில் கமநல கேந்திர நிலைய மீள்நிர்மாணம். | எம்7 | 41000 |

(சி-8121)

*02.* இதன் பின்னகத்து தொழில் தருனராக குறிப்பிடப்படும் **(NECORD)** கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

*03.* பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்க முடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

**I** நிர்மாணப்பயிற்சி. அபிவிருத்தி நிறுவனத்தினால் **(ICTAD)** விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர், பதிவு, தரவுபடுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்த காரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**II** கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இதற்கு வாடிக்கையாளார்களிடமிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும்.

இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

**III** இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி கோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

**IV** மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

**V** கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதிப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

*04.* மேற்படி பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமைய வேண்டும். ஏதேனும் ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும்.

*05.* ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களைக் கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்), மாவட்டச் செயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்திலுள்ள திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*06.* கேள்வி ஆவணங்களை 2003 மே 22ந் திகதியிலிருந்து யூன் 5ந் திகதிவரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000/- த்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்திக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

*07* கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு 1 வாசகம் 11 குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இது தொடர்பாக பந்தி எட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

*08.* அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர் கருத்திட்ட கேள்விச் சபை மாவட்டச் செயலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு 2003 யூன் மாதம் 12 ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்க வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

*09.* கேள்வி சம்பந்தப்பட்ட கூட்டமொன்று யூன் 03 ந் திகதி அன்று முற்பகல் 10.30 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

*10.* கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**த'.இராசநாயகம்**
**தலைவர், மாவட்ட கேள்விச் சபை,**
**அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**



## சிந்தனைக்கு

நாம் துணிந்து போராடுவோம், சத்தியம் எமக்குச் சாட்சியாக நிற்கிறது, வரலாறு எமக்கு வழிகாட்டி நிற்கின்றது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 22-05-2003

# வம்பை வளர்த்து....!

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரது பாதுகாப்பைக் குறைக்க அரசாங்கம் முயற்சி செய்ததாகவும், அவ்வாறு அவர்களின் பாதுகாப்பிற்குக் குந்தகம் ஏற்படுமானால், நாடு தழுவிய கையோடு வேலை நிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்படும் என பொ.ஐ.முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ள இக்குற்றச்சாட்டுத் தவறானது என பாதுகாப்பு அமைச்சரின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ மறுத்துள்ளார்.

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையை சனாதிபதி சுவீகரித்ததனைத் தொடர்ந்து அரசாங்கத்திற்கும்– சனாதிபதிக்கும் இடையிலான உறவு நிலையில் மோசமானதொரு சூழ்நிலை உருவாகியுள்ள நிலையில் பொ.ஐ.முன்னணியின் அறிவிப்பானது அக்கூட்டணி அரசாங்கத்துடன் எந்த வகையிலாயினும் வம்பு வளர்த்தல் வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்படுவதாகவே எண்ண வைக்கின்றது.

ஏனெனில், தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையை சுவீகரிப்பதற்கான காரணத்தை சனாதிபதி தரப்பால் இன்னமும் நியாய பூர்வமான முறையில் தெளிவுபடுத்த முடியவில்லை. இறுதியில் சுவீகரிப்பிற்கான அதிகாரம் அரசியல் யாப்பின் பிரகாரம் சனாதிபதிக்கு உண்டு என்றே கூறப்பட்டுள்ளது. அதாவது சுவீகரித்ததற்கான நியாயம் கூறமுடியாத நிலையில் சுவீகரிப்பிற்கு அதிகாரம் உண்டு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதை ஒத்த விவகாரமே தற்பொழுது சனாதிபதியின் பாதுகாப்புக் குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக பொ.ஐ.மு. கிளப்பும் புரளியாகும். இப்புரளியானது ,பாதுகாப்பு அமைச்சையோ அன்றி அதன் ஒரு பகுதியையோ குறிவைத்து சனாதிபதி சந்திரிகாவினால் கிளப்பப்படும் ஒன்றாகக் கூட இருக்கலாம். ஏனெனில், ஊகத்தின் அடிப்படையாகக் கொண்டு போராட்டம் ஒன்றை அறிவிப்புச் செய்வதென்பது போராட்டத்திற்கான உள்நோக்கம் வேறொன்றாகவே இருக்கக் கூடும் என்பதை வெளிப்படுத்துவதாகிறது.

ஆனால், இது மாத்திரமல்ல, சனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்புக் கருதி காலிமுகத்திடல் வரையில் ஓர் உயர் பாதுகாப்பு வலயம் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் சனாதிபதியின் தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால், இக்கோரிக்கையைப் பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே நிராகரித்து விட்டது.

பாதுகாப்பு அமைச்சின் இந்நிராகரிப்பானது இன்றைய அரசியற் சூழ்நிலையில் முற்றிலும் சரியானதே. ஒரு புறம் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும், மறு புறத்தில் அரசியல் ரீதியிலான தாக்குதல்கள், கொலைகள் மிகக் குறைவடைந்துள்ள நிலையிலும், மக்களின் அசௌகரியத்தையும் கருத்திற் கொண்டு வெளியிடப்பட்ட இந்நிராகரிப்பு ஏற்புடையதொன்றே.

இது மட்டுமல்ல, இன்றைய சூழ்நிலையானது இராணுவச் செலவீட்டைக் குறைப்பதற்கும் ஏதுவானதொன்றாகவே உள்ளது. மாறாக சனாதிபதியின் பாதுகாப்புப் பிரதேச விஸ்தரிப்பானது இராணுவச் செலவீட்டை அதிகரிப்பதோடு, கொழும்பின் மையப்பகுதியில் இயங்கும் பெரும் வர்த்தக நிறுவனங்களையும் பாதிப்பிற்குள்ளாக்கக் கூடியதும் ஆகும்.

ஆனால், சனாதிபதியின் பாதுகாப்பு என்பதை அரசியல் விடயமாக்க முற்பட்டு நிற்கும் பொ.ஐ. முன்னணி சனாதிபதியின் பாதுகாப்புக் குறைக்கப்படக்கூடும் என்ற ஊகத்தின் அடிப்படையிலான பிரச்சாரம் பிசுபிசுத்துப் போகையில் பாதுகாப்பை அதிகரித்தல் என்ற விடயத்தை அரசாங்கம் நிராகரித்ததை பிரச்சாரப்படுத்த முற்படலாம். அதாவது சனாதிபதியின் பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்தத் தவறுகிறது எனக் குற்றம் சாட்ட முனையலாம். ஆனால் இவையாவும் அரசியல் ரீதியிலான ஆளும் கட்சியுடன் வம்பை வளர்த்துக் கொள்ளும் நோக்கத்தைக் கொண்டவையே.

அதாவது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பதவிக்காலம் முடிவடைவதற்குள் எவ்வாறேனும் ஆளும் கட்சியுடன் வளர்த்துக் கொள்ளும் வம்பொன்றின் மூலம் அரசாங்கத்தைக் கவிழ்க்கவோ அன்றி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவோ முயற்சிக்கின்றார் என்பதே உண்மையாகும் ஆனால், அதற்காக எவ்வாறேனும் அரசாங்கத்துடன் தேவையற்ற சீண்டுதல்களை மேற்கொள்வதையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றார்.

சிறிலங்கா அரசியல் யாப்பு சனாதிபதிக்கு வழங்கும் வரையறையற்ற அதிகாரங்கள் அப்பதவிக்கு வரும் அரசியல்வாதிகளை தெரிந்தோ தெரியாமலோ சர்வாதிகாரிகளாக மாற வழி வகுத்து வருகின்றது. இந்நிலையில் வரட்டுக் கௌரவமும், பிடிவாதமும், அதிகார வெறியும் கொண்ட சந்திரிகா போன்றவர்களை அப்பதவி என்பது நீதிக்கு அப்பாற்பட்டவர்களாக்குவது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல.

# மோதல்கள் நடக்கும் நாடுகளின் சமாதான முயற்சிகளுக்கு இலங்கை சிறந்த உதாரணம்!

## -புதிய அமெரிக்கத் தூதுவர் கருத்து

(கொழும்பு)

மோதல்கள் இடம்பெறும் நாடுகளில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு இலங்கை சிறந்த உதாரணமாக இருக்கின்றது என இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்த 18 மாதங்களாக அமுலிலுள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கை நம்பிக்கை அளித்துள்ள அதேவேளை, இக்காலப் பகுதியில் அரசும், புலிகளும் மேற்கொண்ட சமாதான முன்னெடுப்புக்கள் எதிர்பார்த்ததைவிட வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளன.

இதன் மூலமாக இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படக் கூடிய வாய்ப்பு அதிகரித்துள்ளதாகவும், இது மோதல் இடம்பெறும் ஏனைய நாடுகளுக்குச் சிறந்த முன்னுதாரணமாக அமைந்துள்ளது என அவர் மேலும் கூறியுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

பிரதமராக ரணில் தெரிவு செய்யப்பட்ட பின்னர் சமாதான நடவடிக்கைகள் முனைப்போடு முன்னெடுத்துச் செல்லப்பட்டதாக அவர் கூறியுள்ளார். அத்துடன் இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற சமாதான நடவடிக்கைகளுக்கு சர்வதேச ரீதியில் கிடைத்து வருகின்ற ஆதரவோடு அமெரிக்காவும் தொடர்ந்து தனது ஆதரவை வழங்குமெனவும், இதன் பொருட்டுத் தான் அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தகவல் தொழில் நுட்ப சட்டமூல விவாதம் ஜே.வி.பி.யின் செயலால் ஒத்திவைப்பு!

(கொழும்பு)

தகவல் தொழில் நுட்பம் பற்றிய சட்டமூலம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படுவதற்கு ஜே.வி.பி இடையூறு விளைவித்தால் பிறிதொரு தினத்திற்கு வாக்கெடுப்புக்கு விட அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இச்சட்டமூலத்தை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றுவதற்கு பொ.ஐ.முன்னணி உட்பட எதிர்க்கட்சிகள் இணக்கம் தெரிவித்திருந்தன. ஆயினும் ஜே.வி.பி. இவ்வாறு பொது இணக்கப்பாடு ஏற்பட்டிருக்கும் நிலையிலும் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென யோசனை தெரிவித்தது. விமல்வீரவன்ச இது தொடர்பாக தெரிவித்த யோசனைகளுக்குப் பதிலளித்த பிரதமர், நாட்டில் பெரும் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டுள்ளது எனவும் மக்களின் தேவைகளைக் கவனிக்கும் பணியில் அரச அமைச்சர்களும், பாராளுமன்ற அங்கத்தவர்களும் ஈடுபட்டுள்ளனர். எனவே இவ் அமைச்சர்கள், பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஆகியோர் சமுகமளிக்காத நிலையில் வாக்கெடுப்பு நடத்தப்படுவது அநீதியானது எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் வாக்கெடுப்பு அவசியம் நடத்தப்பட வேண்டுமென ஜே.வி.பி. உறுதியாகத் தெரிவித்தமையைத் தொடர்ந்து இச் சட்டமூலத்தை வேறோர் தினத்தில் சமர்ப்பிக்கப் போவதாக ஆளும் கட்சி தெரிவித்துள்ளது.

# கிளி.மாவட்ட விளையாட்டுத் துறையை முன்னேற்றுதல் பற்றி கலந்துரையாடல்

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களுடனான சந்திப்பொன்று கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பின் போது மேற்படி மாவட்டத்தில் விளையாட்டுத்துறையை முன்னேற்றுவது தொடர்பாகவும் மக்களை அதிகளவு பங்குபற்ற வைப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட அணிகள் அனைத்துக்கும் தலா ஒரு உதைபந்து வீதம் வழங்கப்பட்டது.

மேற்படி சந்திப்பில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா,வன்னி மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ராஜா, கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தேவன் மற்றும் கிளி. மாவட்ட விளையாட்டு அதிகாரிகளான கனகராசா, ஆனந்தராஜா, சிவநேசன், ஜெயக்குமார், புவனேந்திரராஜா, விளையாட்டுத்துறைச் செயலாளர் அன்ரன் அன்பழகன் ஆகியோர் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டனர். (லோ)

# பாகிஸ்தான்-நியூசிலாந்து அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவு!

அல்பலாஹ் முக்கோணத் தொடரின் இறுதியாட்டத்திற்கு பாகிஸ்தான் நியூசிலாந்து அணிகள் தெரிவாகியுள்ளன. இந்தப் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டிக்கான அணி பாகிஸ்தானா, சிறிலங்காவா தெரிவாகும் என்ற நிலையில் நேற்று முன்தினம் போட்டியில் பாகிஸ்தான் அணி 22 ஓட்டங்களால் நியூசிலாந்தை வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.




பாகிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 48.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

# வில்லியம்ஸ் சகோதரிகளுக்கு சவாலாகும் வீராங்கனைகள்!

டென்னிஸில் வில்லியம்ஸ் சகோதரிகள் 3 ஆண்டுகளாகச் செலுத்தி வரும் ஆதிக்கத்திற்கு இளம் வீராங்கனைகள் இனிமேல் சவாலாக விளங்குவர். இதனால் இவர்களது தொடர்வெற்றி பாதிக்கப்படும் என 19 வயதான பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளிஸ்டர்ஸ் கூறியுள்ளார்.

உலகில் இரண்டாம் நிலை வீராங்கனையாகத் திகழும் கிளிஸ்டர்ஸ் கடந்த ஞாயிறு இத்திரேலியன் ஓபன் பட்டத்தை வென்றார்.

உலகின் முதல் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸை அரையிறுதியில் தோற்கடித்த பிரான்சின் அமேலி மௌரஸ்மோவை இறுதி ஆட்டத்தில் தோற்கடித்தார் கிளிஸ்டர்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது உலகின் இரண்டாம் நிலை வீராங்கனை எனும் புகழையே விரும்புகின்றேன். முதல்நிலை வீராங்கனை யானால், அது நம்பமுடியாத நிகழ்வாகவே கருதுகின்றேன் என்றும் அவர் கூறினார்.

## லெப்.கேணல் ராதா.....

இவ்வாறு தனது அசாத்தியமான திறமைகளினால் எதிரியைத் தோற்கடித்து போராளிகள், மக்களின் மனங்களை வென்று எம் தலைவர் அவர்களின் மனதில் நீங்கா இடம் ஒன்றைத் தக்கவைத்த ராதா அவர்களின் எண்ணம் நிறைவாக வேண்டும்.

தளபதி விக்டர் அவர்களின் வீரச்சாவின் பின் எமது மகளிர் படையணியின் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களை வகுத்துக் கொடுத்தார். சகல துறைகளிலும் தாமே தம்மை வழிப்படுத்திச் செல்லக்கூடிய ஆளுமைபெற வேண்டுமென்பதில் கருத்தூன்றி செயற்பட்டார்.

ஆயுதங்கள் தொடக்கம் வாகனங்கள் வரை தாமே தேறிவரும் ஒரு சூழலை உருவாக்கி எதிர்காலத்தில் பெரும் மரபுப் படையணியாக நிற்பதற்கான நம்பிக்கையினை ஊட்டியவர் தளபதி ராதா.

சமூக மற்றும் மத ரீதியிலான முரண்பாடுகளையும், மாற்று இயக்க உறுப்பினர்களுடன் ஏற்படுகின்ற முரண்பாடுகளையும் மிகவும் மென்மையான அணுகுமுறையி னூடாக சீர்செய்வதில் அக்கறை காட்டினார். நேர்மையான அணுகு முறையைப் பிரயோகித்தார், கற்பித்தார்.

சமூக மற்றும் மதத் தலைவர்களைச் சந்திக்கும் போதும், மாற்று இயக்க குழுத்தலைவர்களைச் சந்திக்கும் போதும் உயர் பண்புகளை வெளிக்காட்டினார்.

ஊருக்கு ஊர் பேசுகின்ற பேச்சு வழக்கினையும், நகைச்சுவைக் கதைகளையும் உன்னிப்பாகக் கேட்டு மகிழ்ந்து, மெய்மறந்து சிரிக்கும் தளபதி ராதா, போராளிகளின் இழப்பு மட்டுமல்லாது, மக்களின் இழப்பினையும் சமமாக மதித்து வேதனையோடு கண்கலங்கி நிற்கும் போது அவரிடமிருந்த குழந்தை உள்ளத்தை, சூழநின்ற நண்பர்களால் மட்டுமே அறிய முடிந்தது.

தளபதி ராதா அவர்களின் வரலாறு நீண்டது. சமகாலத்தோடு பின்னிய வரலாற்றுடன் அவரது 16ஆவது ஆண்டு நினைவு நாளில் சில குறிப்புக்கள் மட்டுமே இங்கு பதிவாகின்றன.

இன்றைய அமைதிக்கான பொழுதுகளுக்காய் ஆயிரம் ஆயிரம் நம்பிக்கை நட்சத்திரங்களை எம் விடுதலை வானில் விதைத்துவிட்டோம்.

இனிமேலும் புலிகளைப் போரில் வெல்ல முடியாது என்பதைப் படைத் தரப்பினருக்கும், சிங்கள பேரினவாதிகளுக்கும் உணர்த்திய பின்பே அவர்களால் யுத்த நிறுத்தமும், சமாதானமும் விரும்பப்பட்டன.

தம்மால் விரும்பியபோதெல்லாம் தமிழ் இளைஞர்கள், யுவதிகளை சுற்றிவளைக்கலாம் கைது செய்யலாம் என்ற நிலை மாறி.

தமிழ் மக்கள் துணிந்தால் எமது மண்ணிலேயே எதிரியைச் சுற்றி வளைக்கவும், சரணடையச் செய்யவும் கூடிய எமக்குச் சார்பான போர்ச் சூழல் உருவாகியுள்ளது என்ற பேருண்மை புரியவேண்டும்.

பேரினவாதிகள் தமது இனவாதப் போக்கினைக் கைவிட வேண்டும். படைத்தரப்பு தமது வரட்டுப் பிடிவாதத்தைக் கைவிட வேண்டும். அதுவரை நாம் பொறுமை காப்போம். தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகள், அமைதி வழியே நிறைவேற்றப்பட வேண்டும். தளபதி ராதா போன்று ஆயிரம் ஆயிரம் வீரர்களின் கனவு நனவாக ராதா வான்காப்பு அணியோடு இணைந்த எமது ஏனைய படையணிகளும் அமைதிக்கான அணிவகுப்பில் வலம் வரும்.

# அரசும், சர்வதேச சமூகமும் பிரச்சினைக்கு இதயசுத்தியுடன் முடிவு காணவேண்டும்!

## -வன்னி.மாவட்ட.வெ.அ.ஒன்றியம் பிரதமருக்கு மகஜர்

முழுச்சமூகத்தாலும் எதிர்பார்க்கப்படும் நிரந்தர தீர்வுடனான சமாதானத்தை இந்நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் மேலும் உடைமை, உயிர் இழப்புகளைத் தவிர்க்கும் முகமாகவும் அரசும் சர்வதேச சமூகமும் இணங்களின் ஒற்றுமையில் அக்கறை கொண்டு இதய சுத்தியுடன் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு முடிவுகட்ட வேண்டும் என வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தினர் பிரதமருக்கு அனுப்பிய மனுவில் தெரிவித்துள்ளனர்.

"தமிழ் இனத்தை ஏமாற்ற நினைத்து ஏமாறாதீர்கள்" என்ற தலைப்பில்வெளியிடப்பட்ட மனுவில் மேலும் குறிப்பிடுகையில்;

இந்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையில் கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களைக் கட்டம் கட்டமாக சுழற்சிமுறையில் ஏமாற்றிவந்துள்ளது என்பது வரலாற்றுண்மையாகும்.காலங்களைக் கடத்தி, ஏமாற்றி தமிழ் மக்களின் உடைமைகளையும் உயிர்களையும் அழித்ததோடு உரிமைகளும் மறுக்கப்பட்டு வந்ததன் விளைவாகவே தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் நிலை உருவானது. இதனால் தமிழ்மக்கள் ஆயுதங்களுடன் வெற்றிகளைச் சந்தித்தார்கள்.

இறுதியில் யுத்தத்தினால் சமாதானத்தினை அடைய முடியாது என்று புரிந்துணரப்பட்டதன் காரணமாக இன்றைய அரசு சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்தத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஓர் புரிந்துணர்வுடன் படிக்கையில் கைச்சாத்திட்டதன் ஊடாக நிரந்தர சமாதானத்துக்கான அடித்தளம் அமைக்கப்பட்டு பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது.

இதனடிப்படையில் விடுதலை புலிகளும் இப்பேச்சுவார்த்தைமூலம் சமாதானத்தில் நம்பிக்கை வைத்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு பேச்சு மேடைக்கு வந்துள்ளனர்.

அந்தவகையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்தை அடைந்துள்ள நிலையில் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட பல அம்சங்கள் அரசினால் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறான செயற்பாடுகளின் பின்னர்தான் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதில் இருந்து புறக்கணித்து வருகின்றனர். எனவே இந்தநிலை தொடர்ந்து நிலவாமல் இருப்பதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என வற்புறுத்துவதோடு விடுதலைப்புலிகளின் இச்செயற்பாட்டை தமிழ்மக்கள் ஒற்றுமையுடன் வரவேற்பதுடன் அரசோ அல்லது வேறு எந்தச் சமூகமோ தமிழ்மக்களையும் விடுதலைப் புலிகளையும் வேறுபடுத்திப் பார்ப்பதைத் தவிர்த்து முழுச்சமூகத்தாலும் எதிர்பார்க்கப்படும் நிரந்தரத் தீர்வுடனான சமாதானத்தை இந்நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் உடைமை உயிர் இழப்புக்களை தவிர்க்கும் முகமாகவும் இப்பிரச்சினையுடன் தொடர்புடைய அரசும் சர்வதேச சமூகமும் இனங்களின் ஒற்றுமையில் அக்கறை கொண்டு இதய சுத்தியுடன் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு முடிவு கட்ட உங்களாலான ஆன சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என எமது சங்கம் தமிழ் மக்கள் சார்பாக வேண்டிநிற்கின்றது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவருக்கு சர்வதேச சமூகம் உதவவேண்டும்!

## - பிரதமர் ரணில் கோரிக்கை

(கொழும்பு)

வெள்ளப்பெருக்காலும் மண்சரிவுகளாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு சர்வதேச சமூகமும் உதவிவழங்க வேண்டும் என்று சிறிலங்காப் பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளை அழைத்து நேற்று அலரிமாளிகையில் நடாத்திய மாநாட்டிலேயே பிரதமர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த மாநாட்டில் 60 இற்கும் மேற்பட்ட நாடுகளின் தூதுவர்கள் கலந்துகொண்டனர்.

இதில் அமைச்சர்களான மிலிந்த மொறகொட, கருஜெயசூரிய, ஜோன் அமரதுங்க மற்றும் ரவீந்திர சமரவீர ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தி மக்கள் மீளக்குடியேற இடமளிக்க வேண்டும்

## வலி.வடக்கு பொதுசன அமைப்புகள் ரணிலுக்குக் கடிதம்

புரிந்துணர்வு உடன்படிக்கையையும் ஆறு சுற்றுப் பேச்சுக்களிலும் எடுக்கப்பட்ட முடிவுகளையும் நடைமுறைப்படுத்தி 15 ஆண்டுகளுக்கு மேலாகத் துன்பம் அனுபவித்து வரும் மக்கள் மீளக்குடியேற இடமளிக்க வேண்டும் என வலி. வடக்கு பொது அமைப்புகளின் ஒன்றியம் நேற்று முன்தினம் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் மேலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் வலி. வடக்கில் வாழ்ந்த ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமக்கு ஒரு சுபீட்சமான வாழ்வுகிட்டும் என ஆரவாரித்து நின்றோம். ஆனால் ஒரு ஆண்டு பூர்த்தியாகிய பின்னரும் ஆறுசுற்றுப் பேச்சுக்கள் முடிந்த பின்னரும் தற்போது இடம்பெயர்ந்து வன்னியிலும், தென்னிலங்கையிலும் அந்நிய நாடுகளிலும் வாழ்ந்த எமது பகுதி மக்கள் யாழ். குடாவை நோக்கி வந்துகொண்டிருக்கின்றார்கள். எமது வாழ்விடங்கள் பலவற்றில் ஆக்கிரமிப்பு முகாம்களும் காவல் அரண்களுமாக இருப்பதனால் இம் மக்கள் குடியிருக்க வழியின்றி இருப்பதுடன், மற்றும் விவசாய கடற்றொழில்களை இழந்து பெரும் இடர்களை எதிர்நோக்கியுள்ளனர். ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டபடி இராணுவம் மக்களது வீடுகளையும், நிலத்தையும் விட்டு விலகினால் இவ் அவலம் ஏற்பட வாய்ப்பில்லை. கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாகத் துன்பத்தில் வாழும் எமது மக்களை மேலும் துன்பத்துக்கு உள்ளாக்குவது போல் புதிய இராணுவ முகாம்களும், இராணுவ நிலைகளும் அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவை ஒப்பந்த மீறல் மட்டுமல்ல இந்த மனிதநேய விதிமுறைகளுக்குள் அடங்குகின்றதா என எமக்குத் தெரியவில்லை.

நாம் எமது உணர்வலைகளை வெளிப்படுத்தும் வகையில் யாழ் மாவட்ட அரசநிர்வாக செயலகம் முன்பாக மறியல்போராட்டத்தை நடத்தி இம் மனு மூலம் தெரியப்படுத்தியுள்ளோம். இதனை நன்கு ஆராய்ந்து புரிந்துணர்வு உடன்படிக்கையையும், ஆறுசுற்றுப் பேச்சிலும் எடுக்கப்பட்ட முடிவுகளையும் நடைமுறைப்படுத்துமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

கோரிக்கைகள் கவனிக்கப்படாமல் இருந்தால் பரந்தளவில் தொடர்ந்து போராட்டங்களை நடத்தும் நிலைக்கு எமது மக்கள் தள்ளப்படுவார்கள் என்பதை வலியுறுத்துகின்றோம் என அம்மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆனையிறவு உப்பு உ.நிறுவன ஊழியர்களுக்கான கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தில் கடமைபுரிந்த நிரந்தர ஊழியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25ம் திகதி காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் மேற்படி கலந்துரையாடல் நடைபெறவுள்ளதால் ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தில் கடமை புரிந்த நிரந்தர ஊழியர்களை நியமனக் கடிதம் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஆகிய ஆவணங்களுடன் வருமாறும் இதுவரை ஓய்வூதியம் பெறாத ஊழியர்களையும் அன்றைய தினம் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.(பா)

# அரசைக் கலைத்துவிடும் தீர்மானம் சு.க. மாநாட்டில் எடுக்கப்படும்!

## ராவய பத்திரிகை தகவல்

(கொழும்பு)

மே மாதம் 27ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஸ்ரீ.ல.சு.க. செயற்குழு மாநாட்டின் போது தற்போதைய அரசைக் கலைத்துவிட சனாதிபதியால் தீர் மானம் எடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருவதாக 'ராவய' சிங்களப் பத்திரிக்கை கூறுகிறது.

தற்போது சூடுபிடித்திருக்கும் அரசியல் சிக்கல்களைத் தீர்க்கும் வகையில் செய்யப்பட வேண்டியது. "அரசு கலைப்பே" என சனாதிபதிக்கு ஆலோசனை கூறப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. இது தொடர்பாக செயற்குழுவில் அநேகமானோர் ஆதரவு தெரிவித்தும் உள்ளனர். எனினும் தேர்தலில் ஏற்படும் தோல்வியைப் பற்றிச் சிந்திக்கும் ஒருகுழுவினர் இதற்கு எதிர்ப்பு காட்டியும் வருகின்றனர்.

சில சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஜே.வி.பி.யுடன் கூட்டு உறுதியான பின்பு தேர்தலை சந்திப்பது என்றும் கருதுகின்றனர்.இவர்களுள் 4பேர் சிரேஷ்ட உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருநகர் பிரதான வீதி புனரமைப்பு நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி அரச அதிபரின் நிதி உதவியுடன் கரைச்சிப் பிரதேச சபையினரால் திருநகர்பிரதான வீதி புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றது.இதன் காரணமாக திருநகர் பிரதான வீதியின் மத்தியிலிருந்து இருபக்கமும் 17' வீதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே இதற்கமைவாக 17' உள்ளாக காணிகளைக் கொண்டுள்ள காணி உரிமையாளர்கள் காணி வேலிகளைப் பின்நகர்த்தி வீதிப் புனரமைப்பு வேலைகளுக்கு ஒத்தாசை நல்கிடுமாறு கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தன் வேண்டியுள்ளார். (சோ)

# மன்னார் மக்கள் அன்பளிப்பு

(மன்னார்)

இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மன்னார் மக்கள் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

மன்னார் பிரதேச வெகுசன அமைப்புக்கள் தேசிய எழுச்சிப் பேரவை, மன்னார் அரசியல்துறையின் மூலம் பெறப்பட்ட நன்கொடைப பொருட்கள் நேற்று அவர்களுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (மி)

## கையஸ்.....

பற்றி மேலும்தெரியவருவதாவது; பரந்தன் முல்லை வீதியால் பரந்தனை நோக்கிச் சென்ற கையஸ் வானும் தருமபுரம் கட்டைக்காட்டு வீதியால் தருமபுரம் நோக்கி வந்த துவிச்சக்கர வண்டியுமே விபத்துக்குள்ளானது. துவிச்சக்கர வண்டியில் வந்தவரே கொல்லப்பட்டவராவார். (14)

## தமிழ்.....

இச்சந்திப்பின்போது வடக்கு, கிழக்கில் நிர்வாகக்கட்டமைப் பொன்றை உருவாக்கவேண்டும் என்பதில் விடுதலைப்புலிகள் உறுதியாக உள்ளதாகவும் இது குறித்து அரசாங்கத்துடன் பேசி நடவடிக்கை எடுக்குமாறு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நோர்வேத் தூதுவரைக் கோரியுள்ளனர்.

இந்த விடயம் குறித்து அரசாங்கத் தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதாக நோர்வேத் தூதுவர் பதிலளித்துள்ளார். இதனையடுத்து நேற்றுப்பிற்பகல் 3.00 மணியளவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள் ளனர். இதன்போது விடுதலைப்புலி களின் உறுதியான நிலைப்பாடு குறித்தும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான தமது சந்திப்புத் தொடர்பாகவும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமருக்கு விளக்கிக் கூறியுள்ளனர்.

## எங்கு வாழ்......

யினரை சான்றிதழ் வழங்கி கௌரவிக்கும் சிறப்பு நிகழ்வு நேற்று முல்லை மாவட்ட அரச சார்பற்ற நிறுவன இணைய கேட்போர் கூட்டத்தில் நடைபெற்றது.

முல்லைமாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழக பேராதரவுடன் ஒருங்கமைக்கப்பெற்று வெகு சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்விற்கு தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. செ.முகுந்தன் ஏற்றிவைத்தார்.

மங்கல விளக்கினை யுனிசெப் நிறுவன வன்னிப் பிரதிநிதி பெனிபுறூன்,திருமதி கௌரி மகேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

முல்லை. மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் திரு.றீகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வரவேற்புரையை தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவிப் பணிப்பாளர் திரு.எஸ்.இனியவன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து முகாமைத்துவ வலுப்படுத்தல் பயிற்சிநெறி பெற்ற வள அணியினருக்கான சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு இடம் பெற்றது. சான்றிதழ்களை யுனிசெப் பிரதிநிதி பெனிபுறூன், சர்வதேச தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் Dr.ஜெய் மகேஸ்வரன், அவுஸ்திரேலிய தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச்சேர்ந்த பொறியியலாளர் சண்குமார், திருமதி கௌரி மகேஸ்வரன், அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி உட்பட முக்கிய பிரதிநிதிகள் வழங்கிக் கௌரவித்தனர். வள அணியினருக்கான நினைவுப் பரிசில்களை அவுஸ்திரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த அ.பரராஜசிங்கம் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார்.

சிறப்புரைகளை Dr.ஜெய் மகேஸ்வரன், திட்டப்பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, அவுஸ்திரேலிய தமிழர் கழக இணைப்பாளர் அ.பரராஜசிங்கம் யுனிசெப் பிரதிநிதி திருமதி. பெனிபுறூன், தமிழர்புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப்பணிப்பாளர் திரு கே.பி.றெஜி ஆகியோர் நிகழ்த்தினர்.

40 நாட்களாக நடைபெற்ற முகாமைத்துவ வலுப்படுத்தல் பயிற்சி நெறியில் பயின்று தேர்ச்சி பெற்று முதல் மூன்று இடங்களைப் பெற்ற திருமதி.சுபாஷினி, யோ.றொபேட் (சதீஸ்) கா.கனோசலிங்கம் ஆகியோருக்கு த.பு.கழக நிறைவேற்றுப்பணிப்பாளரால் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சர்வதேச த.பு.கழக பணிப்பாளர் Dr.ஜெய் மகேஸ்வரன் தனது உரையில், வடக்கு கிழக்கு 08 மாவட்டங்களிலும் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த 35 தலைமைத்துவ அலுவலர்கள் இப்பயிற்சி நெறிக்காக இணைக்கப்பெற்றனர். இவர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி நெறிக்கு அவுஸ்திரேலிய வாழ் ஈழத்தமிழ் நிபுணர்கள் நேரடியாக தாம் பெற்ற அறிவைப் பிறரும் பயன் பெறத்தக்க வகையில் வழங்கியிருந்தனர்.இப் பயிற்சி நெறிக்கு அவுஸ்திரேலியாவில் உள்ள இன்னும் பல அறிஞர்கள் நிபுணர்களும் பேராதரவு நல்கியிருந்தமை தாயகத்திலும் பல வள நிபுணர்களைஉருவாக்கி தம்மால் எமது தேசத்தை கட்டியெழுப்ப முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கின்றது.

இது அரசியலிலும் சரி, பொருளாதார ரீதியிலும் சரி ஈழத்தமிழ் மக்கள் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழ்ந்தாலும் பின்னிப்பிணைந்து பிரிக்க முடியாத ஒரு சக்தியாக ஒன்றுபட்டு நிற்கின்றார்கள் என்பதையே உலகிற்கு உணர்த்துகின்றது என்றார்.

யுனிசெப் பிரதிநிதி பெனிபுறூன், தனதுரையில் எதிர்பார்த்ததை விட மிகமிகத் திறமையாக இப்பயிற்சி நெறி நடாத்தப்பெற்றுள்ளது. இப்பயிற்சி நெறி தன்னம்பிக்கையை வளர்த்து நல்ல அணுகுமுறை உடைய ஆற்றல் மிக்க புது மனிதர்களாக ஒவ்வொருவரையும் வளர்த்திருக்கின்றது. இத்திறமைசாலிகள் தாம் பெற்ற அறிவைப் பயன்படுத்தி திட்டங்களை சிறப்பாக முன்னெடுத்து நாட்டை வளப்படுத்த வேண்டும். இதனைத் திறம்பட நடாத்திய த.பு.கழகத்தினருக்கு எனது பாராட்டுக்கள் என பெனிபுறூன் தெரிவித்தார். (லோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சிங்கள அரசும் –நீங்களும் உருவாக்கிய உடன்பாட்டு வரைபு பிரபாகரனின் எதிர்பார்ப்பிற்கு ஏற்றதாக அமையவில்லை!

## அன்ரன் பாலசிங்கம் கெல்ஹேசனுக்குக் கடிதம்

இடைக்கால நிர்வாகம் அமைப்பது தொடர்பாக தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் முன்வைத்துள்ள பரிந்துரைக்குப்பதிலளிக்குமாறு சிறிலங்காப்பிரதமரை விடுதலைப்புலிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இது தொடர்பான கடிதம் ஒன்றை



தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவருமான அன்ரன் பாலசிங்கம் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசனுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தின் முழுவிபரம் வருமாறு;

போதிய அதிகாரங்களுடன் வடக்கு, கிழக்கு அபிவிருத்திப் பணியை மேற்கொள்ளக்கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பொன்றை நீங்கள் பரிந்துரைத்திருக்கின்றீர்கள்.

எங்களது தலைமையின் அறிவுறுத்தலுக்கேற்ப அந்தப் பரிந் துரைகளுக்குப் பதில் அளிக்கின் றேன்.

உங்களது பரிந்துரை மூன்று ஆவணங்களின் வழியாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான உடன்பாட்டு வரைபு - இரண்டாவது வடக்கு கிழக்கு மீள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தியை உறுதிப்படுத்தி விரிவுபடுத்துவது தொடர்பான கருத்துக்கள் - மூன்றாவது வடக்கு, கிழக்கு அபிவிருத்தியை செயற்படுத்த உள்ளூராட்சிச் சபைகளை அடிப்படையாக எடுத்துக்கொள்வது.

உங்கள் பரிந்துரைகளை நாங்கள் முழுமையாக ஆராய்ந்து எங்களது விமர்சனத்தை வெளியிடமுன்பு; வட-கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த எங்களது தலைமை வலியுறுத்துவதற்கான காரணங்களையும் முன்வைக்கின்றோம்.கடந்த பொதுத்தேர்தல் நடப்பதற்கு பல மாதங்களுக்கு முன்னால் இடைக்கால நிர்வாகம் தொடர்பான பரிந்துரையை விடுதலைப்புலிகள் முன்வைத்திருந்தனர். இந்தப் பரிந்துரையை ஐக்கிய தேசியக்கட்சி ஏற்றுக்கொண்டதோடு இந்தப் பரிந்துரைக்கு ஆதரவாக சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படையாகவே பிரச்சாரம் செய்தார். நீங்கள் அறிந்து கொண்டபடி விடுதலைப் புலிகளின் ஈடுபாட்டோடு இடைக்கால நிர்வாகம் உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடல் தாய்லாந்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இடம்பெற்றது. விடுதலைப் புலிகளின் இந்தப் பரிந்துரைக்கு சிறிலங்காவின் அரசியல் சட்டத்திற்கு அப்பாற்பட்டு இத்தகையதொரு நிர்வாக அமைப்பை உருவாக்குவதில் சிக்கல் இருப்பதாகப் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பதிலளித்தார்.

ஆரம்பக்கட்டத்திலே அரசியல் முரண் பாடுகளைத் தவிர்க்கும் வகையில் வடக்கு கிழக்கிற்கான மனிதாபிமான மற்றும் மீள் கட்டமைப்பு கூட்டுச் செயற்பாட்டுக்குழு ஒன்றை உருவாக்க பேச்சு வார்த்தையில் ஈடுபட்ட இருதரப் பின்னரும் ஒத்துக் கொண்டனர். இரண்டாவது கட்டப் பேச்சு வார்த்தையின் போது இந்தக் கூட்டுச்செயற்பாட்டுக்குழு "சிரான்" என்று அழைக்கப்படும் உடனடி மனிதாபிமான மற்றும் மீள்புனரமைப்புக்கான உபகுழுவாக மாற்றி அமைக்கப்பட்டது. மனிதாபிமான மற்றும் மீள் கட்டமைப்புத் தேவைகளைக் கண்டறிந்து அந்தத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான செயற்பாடுகளை முதன்மைப்படுத்துவது இந்த உபகுழுவின்பணி என்று தீர்மானிக்கப்பட்டது.

உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது, கண்ணிவெடிகளை அகற்றும் திட்டங்கள், இடம் பெயர்ந்த மக்கள் தங்கள் சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பும் முயற்சிக்கு உதவியாக வீதிகளை மறுசீரமைத்தல், சுகாதார வசதிகளை உருவாக்குதல் பாடசாலைகளைப் புனரமைத்தல் போன்ற பணிகளை முன்னெடுத்தல் ஆகியவற்றிற்கு ''சிரான்'' முதன்மை அளிக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

நீண்ட போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வின் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பது மற்றும் மக்கள் தங்கள் சொந்த இருப்பிடங்களில் குடியேறும் நடவடிக்கையினை துரிதப்படுத்துவது ஆகிய நோக்கங்களுடனேயே கூட்டுச் செயற்பாடு என்ற அடிப்படையில் "சிரான்" உருவாக்கப்பட்டது.

வடக்கு கிழக்குப்பகுதியில் இடம் பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்களை மீளக்குடியமர்த்தி அவர்களுக்கான புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் அத்தியாவசியப்பிரச்சினையாக உணரப்பட்டது.

இந்தப் பாரிய மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ளும் நோக்குடனேயே ''சிரான்'' உருவாக்கப்பட்டது.ஆனால் மக்களின் இன்னல்களைப் போக்குவதிலும் இடம்பெயர்ந்த மக்களின் துன்பங்களை அகற்றுவதிலும் சிரானின் செயற்பாடுகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. விடுதலைப்புலிகள் முழுமையான ஒத்துழைப்பை அளித்திருந்தும் மக்களின் எதிர்பார்ப்பிற்கு அமைய சிரானின் செயற்பாடுகள் அமையவில்லை. இத்தகைய செயற்பாடற்ற தன்மையும் உடனடி மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் எவ்வித பலன்களையும் ஏற்படுத்தாமையும் சிரான் மீது தமிழ் மக்களை நம்பிக்கை இழக்கச் செய்துவிட்டது. இந்த விரக்தியான சூழ்நிலையிலே உங்களது வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான்பீற்றர்சனுடனான கலந்துரையாடலில் போதிய ஆதாரங்களைக் கொண்ட சட்டபூர்வமான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கி மனிதாபிமான மற்றும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க திரு. பிரபாகரன் பரிந்துரைத்திருந்தார்.

இந்தப் புதிய நிர்வாகக் கட்டமைப்பு திறமையானதாகவும் பொறுப்புள்ளதாகவும் வரையறுக்கப்பட்ட செயற்பாடுகளுடனும் அதிகாரத்தையும் கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார். இதனால் வாக்களிக்கப்பட்ட சமாதானத்தின் பலன்கள் எவ்வித தாமதமும் இன்றியும் நிர்வாக இடைஞ்சல் இன்றியும் மக்களைச் சென்றடைய முடியும் என்றும் அவர் கருதினார்.

தமிழ்த் தேசியத்திற்கான நிரந்தரத்தீர்வு புதிய நிர்வாக அமைப்பிலேயே அமைந்திருக்கிறது என்றும் ஆனால் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் அதனை அடைவது கடினம் என்றும் எமது தலைமை கருதுகின்றது. நிரந்தர அரசியல் தீர்வை அண்மைக் காலத்தில் அடைவது சாத்தியமில்லை. என்பதால் விடுதலைப்புலிகளின் அதிக அளவிலான ஈடுபாட்டோடு தமிழர் தாயகத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீளக்கட்டமைப்பது, இயல்பு நிலையை உருவாக்குவது தொடர்பான முடிவுகளை எடுத்து அதனைச் செயற்படுத்தக்கூடிய இடைக்கால நிர்வாகத்தை உருவாக்க விடுதலைப்புலிகளின் தலைமை பரிந்துரைத்துள்ளது. இந்தப் பின்னணியில் விடுதலைப் புலிகளின் அதிக அளவிலான ஈடுபாட்டோடு இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குவது குறித்து இந்திய அரசாங்கம் 1987ஆம் ஆண்டு பரிந்துரைத்திருந்ததையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இந்த இடைக்கால நிர்வாகம் அபிவிருத்தி நிதியை திறமையாகப் பயன்படுத்த முடியாத ஏற்கனவே செயற்பாட்டில் இருக்கும் கட்டமைப்புக்களுக்குமேல் செயற்படக் கூடியதாக இருக்க வேண்டும் என்று எமது தலைமை விரும்புகின்றது.

ஜப்பானில் நடைபெற இருக்கும் உதவி வழங்கும் மாநாட்டை கருத்திற்கொண்டு வடக்கு கிழக்கின் மீள் குடியேற்றம், மீள்புனரமைப்பு, மீள் கட்டுமானம் ஆகியவற்றைச் செயற்படுத்தும் அதிகாரம் கொண்ட திறமையான புதிய நிர்வாகமுறை எவ்வித தாமதமுமின்றி விரைவில் உருவாக்கப்பட வேண்டும் என்று விடுதலைப்புலிகளின் தலைமை கருதுகிறது.

மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகளையும் அதிகாரங்களையும் கொண்ட சிரான், இந்தப் பாரிய திட்டங்களைச் செயற்படுத்த முடியாதென்றே நாங்கள் கருதுகின்றோம்.

அடுத்து வன்னியிலுள்ள எமது தலைமைக்கும் லண்டனிலுள்ள எனக்கும் நீங்கள் அனுப்பியுள்ள பரிந்துரைகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பான எமது விமர்சனத்தைத் தெரியப்படுத்துகின்றோம்.

சிறிலங்கா அரசோடு கலந்தாலோசித்து நீங்கள் உருவாக்கியுள்ள இரண்டு பக்கங்களைக் கொண்ட உடன்பாட்டு வரைபு கடந்த சனிக்கிழமை மே மாதம் 17ஆம் திகதி சு.ப.தமிழ்ச்செல்வனிடம் கையளிக்கப்பட்டது. இந்த வரைபில் மாற்றியமைக்கப்பட்ட சிரானின் மாற்று அமைப்பாக வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் மீள்கட்டமைப்புச்சபை **(D.R.C)** யை உருவாக்குவது குறித்து சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பரிந்துரைக்கப்பட்ட அமைப்பின் செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் ஆகியவை டோக்கியோவில் உதவி வழங்கும் நாடுகளோடு கலந்துரையாடிய பின் இரு தரப்பினராலும் உருவாக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. **D.R.C.** எனப்படும் வடக்கு கிழக்கு அபிவிருத்தி மற்றும் மீள் கட்டமைப்புச் சபை உறுதியான பரிந்துரையாக முன்வைக்கப்படவில்லை. மாறாக சர்வதேச நாடுகளின் வழிகாட்டலோடும் அங்கீகாரத்தோடும் அது இனி உருவாக்கப்பட வேண்டிய கட்டமைப்பின் கருத்தியலாகவே முன்வைக்கப்பட்டுள்ளது. இது திரு.பிரபாகரனின் எதிர்பார்ப்பிற்கேற்ற இடைக்கால நிர்வாக முறையாக அமையவில்லை. சமஷ்டி முறையிலான தீர்வை எட்டும் தெளிவற்ற தீர்வுப்பாதை உட்பட பல்வேறு விடயங்களுக்குக் கட்டுப்படும் ஒரு அமைப்பாகவே **D.R.C.** பரிந்துரைக்கப்பட்டுள் ளது. நீங்கள் முன் வைத்துள்ள வடக்கு,கிழக்கு மீள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தியை உறுதிப்படுத்தி விரிவுபடுத்துவது தொடர்பான கருத்துக்கள் வடக்கு. கிழக்கு அபிவிருத்தி மற்றும் மீள் கட்டமைப்புச் சபையின் நிர்வாக அமைப்புக்குறித்து மேலும் அதிக தகவல்களை அளித்துள்ளன. சிரானின் விரிவுபடுத்தப்பட்ட அமைபபாக ஒன்று - கொள்கை சபை, இரண்டு - திட்டக்குழு, மூன்று- நிர்வாக அமைப்பு ஆகிய மூன்று அடுக்குகளைக்கொண்ட சிறிலங்காப் பிரதமரின் அலுவலகத்தின் கீழ் செயற்படும் ஒரு அமைப்பாகவே வடக்கு கிழக்கு அபிவிருத்தி மற்றும் மீள் கட்டமைப்புச் சபை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. உங்கள் வரையில் கொள்கைத் திட்டமிடல் மற்றும் திட்டக்குழு ஆகியவற்றில் விடுதலைப்புலிகள் சமஅந்தஸ்த்தோடு செயற்படலாம் என்றும், ஆனால் நிர்வாகத்தில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களே ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் அரசியல் பிரதிநிதிகள் நிர்வாக அமைப்பில் எவ்வகையிலும் ஈடுபட முடியாத நிலையே பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அத்துடன் முடிவுகள் எடுக்கும் சபையின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக உங்களது வரைபு விளக்கமளிக்கத்தவறியுள்ளது. அத்துடன் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி மற்றும் மீள் கட்டமைப்புச் சபையின் சட்டரீதியான அந்தஸ்த்து குறித்தும் வரையறுக்கப்படவில்லை. ஆனால், நாடாளுமன்றத்திற்குக் கட்டுப்படும் வகையிலேயே பரிந்துரைக்கப்பட்ட அமைப்பு செல்லும் வகையில் உள்ளது. இறுதியாக வடக்கு கிழக்கு அபிவிருத்தி மற்றும் மீள் கட்டமைப்புச் சபையை உருவாக்கும் இறுதி முடிவு உதவி வழங்கும் நாடுகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது உங்களுடைய பரிந்துரையா? அல்லது சிறிலங்கா அரசாங்கத்தினுடைய பரிந்துரையா? என்று எங்களுக்குத் தெரியவில்லை. இது குறித்து கொழும்பு ஊடகங்கள் ஏற்கனவே விளம்பரப்படுத்தியுள்ளன. மீள் புனரமைப்பு மற்றும் மீள் கட்டமைப்பு ஆகியவற்றைச் செயற்படுத்தக்கூடிய அதிக அதிகாரங்களைக் கொண்ட மத்திய ஒருங்கிணைப்பு அமைப்பை சிறிலங்கா அரசாங்கம் உருவாக்கி இருப்பதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. நீங்கள் முன் வைத்துள்ள பரிந்துரைகளில் புதிய அம்சங்கள் இருந்தாலும் விடுதலைப் புலிகளின் பங்கேற்புடன்வடக்குக் கிழக்கிற்கான திறமையான இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குவது தொடர்பான எமது தலைமை முன்வைத்துள்ள பரிந்துரையின் அம்சங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

பிரதேசசபை மற்றும் உள்ளூராட்சிச் சபையின் ஈடுபாட்டோடு வடக்குக் கிழக்கிற்கான மீள்கட்டமைப்பு தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளார்கள். இந்தப் புதிய எண்ணத்தை நாங்கள் பாராட்டுகின்றோம். உள்ளூராட்சிச் சபையின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப் பட்டு சில குறிப்பிட்ட விடயங்க ளுக்கு உட்பட்டு அமைந்திருப்பதால் மீள் புனரமைப்பு மற்றும் மீள்கட்டமைப்புத் தொடர்பான பாரிய நடவடிக்கைகளை அவை முன்னெடுக்க இயலாது. அத்துடன் அரசியல் சுதந்திரத்திற்காகவும் தேசியத்திற் காகவும் நாங்கள் முன்னெடுத்த எங்கள் விடுதலைப் போர் அதி காரங்கள் இல்லாத கிராமசபைகளில் சென்று முடியுமானால் நாங்கள் தமிழ் மக்களால் பரிகசிக் கப்படுவோம்.

சமாதான முயற்சியில் தற்போது நிலவும் தடைகளை அகற்ற நீங்கள் எடுக்கும் முயற்சிக்கு நன்றி தெரிவிக்கின்றோம். எங்களது தலைவர் திரு வே. பிரபாகரன் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான பரிந்துரைக்குச் சிறிலங்காப் பிரதமரின் அதிகார பூர்வமான பதிலை வெளியிடத் தூண்டுமாறு கேட்டுக் கொள்கின்றோம். தமது கருத்தைத் தெளிவாக உறுதியாக வெளிப்படுத்தும் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சாதகமான பதில் கிடைக்கும் பட்சத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்குவது குறித்தும் உதவி வழங்கும் மாநாட்டில் பங்குபற்றுவது குறித்தும் எமது தலைமை முக்கிய முடிவுகளை எடுக்க உதவும்.

# குடிநீர் கிணறுகள், மலசலகூடங்கள் கிளி. மாவட்டத்தில் அமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதி ஒழுங்கமைப்புடன் கிளி. மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் குடிநீர் கிணறுகள் மற்றும் மலசல கூடங்கள் அமைக் கப்பட்டு வருகின்றன. கரைச்சி, பூநகரி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுகளில் வாழும் மக்களின் சுகாதாரம் மற்றும் குடிநீர் தேவைகளைக் கருத்திற் கொண்டே இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மேற்படி செயற்பாட்டின் கீழ் 46 மலசல கூடங்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதுடன் 30க்கு மேற்பட்ட கிணறுகள் திருத்தம் செய்யப்பட்டும் உள்ளன.

கடந்த காலங்களில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட இப்பகுதி மக்களின் சுகாதாரம் மற்றும் அடிப்படைத் தேவைகளை இச் செயற்பாட்டின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (லோ)

## மீளாய்வு நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரண அட்டை மீளாய்வு நடவடிக்கைகள் இடம் பெற்றுவருகின்றது.

மேற்படி மீளாய்வுகளை மேற்கொள்ளத் தவறியவர்கள் அந்தந்த பகுதிகிராம சேவை அலுவலர்களுடன் தொடர்புகொள்ளும் வண்ணம் கிளி.கரைச்சி பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் வேண்டியுள்ளார். (சோ)

## A.R.V தடுப்பு மருந்து முடிவடைந்தது

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் A.R.V விசர் நாய்கடி தடுப்பூசி கடந்த திங்கட்கிழமை முடிவடைந்துள்ளது.

இதனால் இத்தடுப்பு ஊசியை பெறவருவோர் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி க.அழகேந்திரன் தெரிவித்தார். (26)

## பெயர் மாற்றம்

இல-480 6ம் யூனிற் இராமநாதபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த கந்தையா-மாடசாமி ஆகிய நான் என்னுடைய பெயரை 01-09-2002 இல் இருந்து கந்தையா மோகன் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன். என்னுடனான எத்தொடர்புக்கும் இப்பெயரையே பயன் படுத்துவேன் எனத் தெரியப்படுத்துகின்றேன்.

இவ்வண்ணம்
கந்தையா மோகன்

(3274)



## அறிவித்தல்

வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் பொங்கல் உற்சவத்தின்போது உற்சவ கால எல்லைப் பிரதேசத்துக்குள் வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புவோர் 25.05.2003 தொடக்கம் கோவிலடியில் இயங்கவிருக்கும் பொங்கல் காலக் கரும பீடத்தில் தங்களைப் பதிவு செய்துகொண்டு அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும் 07.06.2003வரை பதிவுகள் ஏற்றுக் கொள்ளப் படும். பிந்தி வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. முன் அனுமதியின்றி எவ்வித நிலையங்களும் இயங்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பரிபாலன சபையினர்
வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் பரிபாலன சபை.

(சி-7875)

## நிலஅளவையாளர் (LAND SURVEYOR) பயிற்சிக்கான விண்ணப்பங்கோரல்

நில அளவையாளராவதற்கான பயிற்சி கீழ்க்காணும் தகைமையுடையோரிடமிருந்து தெரிவு செய்யப்படுவோருக்கு வழங்கப்படவுள்ளது. ஆர்வமுடையோர் சுயவிபரத்துடன் விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி :-** 31.05.2003

1) **தகைமைகள் :-**

அ) க.பொ.த. (சா/த) கணிதம், விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

ஆ) ஏதாவது தொழில் நுட்பக்கல்லூரியில் நில அளவை / தொழில் நுட்பம் /படவரைகலை போன்ற ஏதாவது ஒன்றில் அடிப்படைப்பயிற்சி பெற்றிருப்போர்.

இ) அல்லது வேறு ஏதாவது உயர்தர கல்வித்தகைமையுடையோர் அல்லது இதற்கு சமமான கல்வித்தகைமையுடையோர் (கணினிப்பயிற்சி உட்பட) .

2) **அகவை :-** 18 தொடக்கம் 25 வயதிற்கு மேற்படாதோர் (ஏதாவது பணியிலுள்ளோரின் அகவை 28 வயதிற்குட்பட்டிருப்பின் பரிசீலிக்கப்படும்.)

3) **பால் :-** ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

4) **பயிற்சிக்காலம் :-** இரண்டு (2) வருடம்

5) நேர்முகப்பயிற்சிக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

6) பயிற்சிக் காலத்தின்போது தங்குமிட, உணவு வசதிகள் வழங்கப்படும்.

7) பயிற்சியின் முடிவில் தகுதி காண்போருக்கு நில அளவையாளருக்கான பணி வழங்கப்படுவதுடன், நடைமுறையில் உள்ள அரச சம்பளத்திட்டத்தின் படி சம்பளம் கொடுக்கப்படுவதுடன் 5 வருட திருப்தி கரமான பணியின் முடிவில் தகுதியுடையோருக்கு நில அளவைப் பொறுப்பாளரின் தீர்மானப்படி தமிழீழத்தில் தனிப்பட்டமுறையில் பணியாற்றக்கூடிய நில அளவையாளருக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

முகவரி:-
பொறுப்பாளர்,
நிலஅளவைப்பிரிவு,
மே/பா,ஈழநாதம் பணிமனை,
யாழ்சாலை, கிளிநொச்சி.

பொறுப்பாளர்,
நிலஅளவைப்பிரிவு,
தமிழீழம்.

(சி-8123)

## ஆனி மாத பருவகாலச் சீட்டு வழங்கல்

### தமிழீழப் போக்குவரவுக் கழகம்

தமிழீழப் போக்குவரவுக் கழகத்தினால் வழங்கப்படும் பருவகாலச்சீட்டு கீழ்க்காணும் இடங்களில் 26.05.2003 - 31.05.2003 வரை வழங்கப்படும் என்பதையும், அடுத்துவரும் மாதங்களில் இதே போல் இந்த இடங்களில் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

- ☐ முல்லைத்தீவு பேருந்து நிலையம்,
- ☐ முகமாலைப் பேருந்து நிலையம்,
- ☐ பூநகரி மகாவித்தியாலயம் (26,27ஆம் நாள் மட்டும்)
- ☐ புதுக்குடியிருப்பு தமிழீழப் போக்குவரவுக் கழகம் முல்லைச்சாலை,
- ☐ கிளிநொச்சி தமிழீழப் போக்குவரவுக்கழகம் கிளி/சாலை,

கல்வி கற்கும் மாணவர்களுக்கு கல்வி கற்கும் பாடசாலையில் வழங்கப்படும்



முகாமையாளர்,
தமிழீழப்
போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை
விசுவமடு.



(சி8120)

## செம்பியன்பற்று புனித பிலிப்நேரியார் திருநாளுக்கு

## சிறப்புப் பேருந்துப் பணி

### தமிழீழப் போக்குவரவுக் கழகம்




செம்பியன் பற்று புனித பிலிப் நேரியார் திருநாள் 26.05.2003 ஆம் நாள் நடைபெறும். இத்திருநாளை முன்னிட்டு 25.05.2003ஆம் நாள் பகல் 12.30 மணிக்கு முல்லைத்தீவிலிருந்து மாத்தளன், புதுக்குடியிருப்பு, விசுவமடு, பரந்தன் ஊடாக , செம்பியன் பற்று கோயிலுக்கு சிறப்புப் பேருந்துப் பணி நடைபெறும் என்பதையும் இப்பேருந்து மறுநாள், 26ஆம் நாள் திருநாள் முடிந்ததும் அதே வழித்தடத்தினூடாக முல்லைத்தீவு வந்தடையும் என்பதை தெரிவித்துக்கொள்கின் றோம்.

கிளிநொச்சி, முகமாலை ஆகிய இடங்களிலிருந்தும் செம்பியன் பற்று புனித பிலிப் நேரியார் ஆலயத்திற்கு மக்கள் வருவதற்கு பேருந்து ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

முகாமையாளர்,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி8119)